விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 07 செவ்வாய்க்கிழமை (21.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

*அமைச்சர் ரிஷாத்துக்கு எதிரான*

## அனைத்துக் குற்றச்சாட்டையும் ஆதார பூர்வமாக நிரூபிப்போம்



*உதய கம்மன்பில தெரிவிப்பு*

(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை குறைந்தது 10 ஆக வரையறுக்க முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அனைத்து குற்றச்சாட்டுக்களையும் 24☛

*ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான*

## நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரியோம் - இரா.சம்பந்தன்



(கொழும்பு)

ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காது என இரா.சம்பந்தன் வாக்குறுதியளித்துள்ளார்.

நேற்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ரிஷாத் 24☛

ஜே.விபியின் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் நோக்கம்

# ரிஷாத் பதியுதீனை பாதுகாப்பதற்கா?



*மகிந்தானந்த அளுத்கமகே கேள்வி*

(கொழும்பு) மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையின் நோக்கம் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை பாதுகாப்பதற்கு என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கேள்வி எழுப்பியுள்ளார். (24-ம் பக்.)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## இதுவரையில் 89 பேர் கைது

*பொலிஸ் பேச்சாளர்*

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 89க்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் தற்போது 24☛

## பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய மூவர் கல்முனையில் கைது

(கொழும்பு)

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சா 24☛

## அடுத்த வாரத்துக்குள் ஞானசார தேரர் விடுவிக்கப்படுவார்

பொது பல சேனா நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்த வாரத்திற்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொது பல சேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட 24☛

## ஈஸ்ரர் தின தாக்குதல் இன்றுடன் ஒரு மாதம்!



*உயிரிழந்தவர்களுக்காக*

## அனைத்து வழிபாட்டு தலங்களிலும் மணியை ஒலிக்க விடுக

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடத்தப்பட்ட ஈஸ்டர் தின தாக்குதல்களின் ஒரு மாதப் பூர்த்தியினை நினைவு கூரும் முகமாக இன்று 21ம் திகதி வட மாகாணத்தின் அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் மணியோசை ஒலிக்க செய்வதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியினையும் மேற்கொள்ளுமாறு வடக்கு 24☛

*தமிழ் ஈழம் சைபர் படை*

## இலங்கையின் இணையத்தை தாக்கியதாக கண்டறிவு

(கொழும்பு)

தமிழ் ஈழம் சைபர் படை என்ற குழுவே, இலங்கையில் 11 இணையத்தளங்களின் மீது நேற்று முன்தினம் சைபர் தாக்குதலில், ஈடுபட்டது என்று கண்டறியப்பட் 24☛

## வலிப்பு நோயால் கடலுக்குள் தவறி விழுந்தவர் மரணம்

*வடமராட்சி கிழக்கில் சம்பவம்*



(கரணவாய்)

வலிப்பு நோயால் கடலுக்குள் தவறி வீழ்ந்த கடற்றொழிலாளி ஒருவர் மரணமான சம்பவம் வடமராட்சி கிழக்கு 24☛

*அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில்*

## எடுக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளோம்

*கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்*

(திருகோணமலை)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாம் எடுக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் எடுத்திருக்கின்றோம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்த 23☛

*எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்*

## இந்த வருட இறுதியில் நடத்தப்படுவது உறுதி- மகிந்த

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியில் நடத்தப்படுவது உறுதி என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 24☛

# சிறுவன் உயிரிழந்தமைக்கு காரணம் சிகிச்சை வழங்கலிலுள்ள கவனயீனமா?

## முழுமையான விசாரணையை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 9 வயதுச் சிறுவன் உயிரிழந்தமைக்கு மருத்துவ சிகிச்சை வழங்கலில் உள்ள கவனயீனம் காரணமா? என முழுமையான விசாரணையை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி தர்மபுரத்தைச் சேர்ந்த 9 வயதுச் சிறுவனுக்கு இருதயத்தில் துவாரம் இருப்பதாக மருத்துவ நிபுணரால் அறிக்கையிடப்பட்டது.

அதனால் அந்தச் சிறுவன் கடந்த சனிக்கிழமை யாழிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிறுவனுக்கு சத்திர சிகிச்சையளிக்கப்பட்டது.

சிறுவனுக்கு சத்திர சிகிச்சை நிறைவடைந்து வைத்தியசாலை விடுதியில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் சிறுவன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்ததுடன், நீதி விசாரணைக்காக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் காயத்திரி சைலவனிடம் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அதனால் தனியார் வைத்தியசாலைக்கு நேரில் சென்ற மேலதிக நீதவான், சிறுவனின் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

சிறுவன், இருதயத் துடிப்புக் குறைவான தையடுத்து உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணரின் முன்னிலையில் சிறுவனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தி, அவரது உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிந்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், சத்திர சிகிச்சை வழங்கிய மருத்துவ நிபுணர், விடுதியில் வைத்து சிறுவனுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர், தாதியர்கள், குறிப்பிட்ட தனியார் வைத்தியசாலைப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கிய மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், சிறுவனின் உயிரிழப்புக்கு மருத்துவ சிகிச்சை வழங்கலில் உள்ள கவனயீனமா? எனக் கண்டறிந்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ம-3,101)

---

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசு



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசு அவர்கள் நேற்று (20.05.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

210/1, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 021 222 1054

தகவல்:- குடும்பத்தினர்

---

## வில்லூன்றி பெருவிழா

வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை எட்டரை மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும். தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

யூன் மாதம் இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம)

---

## மரண அறிவித்தல்

சாவு ஒரு வாழ்வு



### திருமதி லூயீசா அருளம்மா தம்பிராசா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை இரண்டாம் கட்டை நவஜீவனத்தில் வசித்தவருமாகிய திருமதி லூயீசா அருளம்மா தம்பிராசா (போதகர் அம்மா) 2019.05.19 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் நவஜீவன பிதா கனம் அமரர் ஏ.சி.தம்பிராசாவின் அன்புத் துணையும் அருள்ராசா (கனடா), அருட்பணி சத்தியராசா (சத்தி தம்பிராசா) இளைப்பாறிய மெதடிஸ்த அருட்பணியாளர், காலஞ்சென்ற பாக்கியராசா, பிறேமராசா (கனடா), தீபராசா (கனடா), காலஞ்சென்ற கிருபானந்தராசா (இயக்குநர் - நவஜீவனம்), குருகுலராசா (முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்), திருராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பத்மினி, கிறிஸ்டல் (கனடா), டொறிஸ் (கொழும்பு), பியூலா (கனடா), ராணி (கனடா), மனோரஞ்சினி (ரஞ்சி அக்கா) (நவஜீவனம்), சித்திரா (கானான்), லின்டா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.05.2019) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் முரசுமோட்டை நவஜீவன புனித சிற்பாசாரி ஆலயத்தில் வைக்கப்பட்டு இறுதிச்சடங்கு மாலை 3.00 மணிக்கு நடைபெற்று மாலை 5 மணியளவில் முதலாம் கட்டை (1ம் கட்டை) பரந்தன் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நவஜீவன நண்பர்கள், நவஜீவன பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முரசுமோட்டை, 2ம் கட்டை, நவஜீவனம். (C-6428)

தகவல்:- குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்

மண்ணில் 1936 - 07 - 18



விண்ணில் 2019 - 05 - 20

### செல்லையா கனகையா

(ஓய்வுநிலை அதிபர் - புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்)

2ம் வட்டாரம் புதுக்குடியிருப்பினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கனகையா அவர்கள் நேற்று (20.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னையா - சிவகாமி தம்பதிகளின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அமரர் சின்னத்துரை, அமரர் சின்னம்மா, திருமதி வேதநாயகி, சின்னத்தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி நளாயினி அமிர்தலிங்கம், திருமதி தர்மதேவி அமிர்தனாதன், திருமதி பிறேமாதேவி இராசேந்திரம், கருணானந்தன், விபுலானந்தன், செல்லையா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2019) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6430)

2ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

தகவல்:- குடும்பத்தினர்

# 250 பேரின் உயிர் குடித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் ஒருமாதம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொடர் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் ஒரு மாதமாகிறது.

கடந்த மாதம் 21ஆம்திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ். ஐ.எஸ். சர்வதேச பயங்கரவாதிகளின் ஆதரவுடன் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தற்கொலைக் குண்டுதாரிகளால் மிலேச்சத்தனமான முறையில் இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் முப்பது ஆண்டுகள் நீடித்துவந்த உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு அமைதியான சூழலில் மீண்டும் குண்டு





வெடிப்புச் சத்தங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாங்கம் விளைவித்தன.

உயிர்த்த ஞாயிறு அன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த மக்களின் உயிர்கள் குடிக்கப்பட்டதோடு சுற்றுலாவுக்காகவும் பல்வேறு தேவைகளுக்காகவும் இலங்கைக்கு வந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்புக்களில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 300 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இவ் அசம்பாவிதங்கள் இடம்பெற்று இன்றுடன் ஒரு மாதம் ஆகின்ற நிலையில் உயிரிழந்தவர்களுக்காக நாட்டிலுள்ள அனைத்துத் தேவாலயங்களிலும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் ஆலயமணி ஓசையெழுப்பி பிரார்த்தனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக செயற்படுவோர் தேசத்துரோகிகள் -ரோஹித

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக செயற்படுவர்கள் தேசத்துரோகிகளாகவே மக்களால் அடையாளப்படுத்தப் படுவார்கள் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர்ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெற்றாலும் தோல்வியடைந்தாலும் அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதிப்புக்களை ஏற்ப



டுத்தும். அதாவது பிரேரணை வெற்றி பெற்றால் றிசாத் பதியுதீனுக்கு ஆதரவாக செயற்படும் மேலும் 5 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கம் இழக்கநேரிடும். இதனால் ஆட்சி கவிழ்ப்பு ஏற்படும்.

மறுபுறம் பிரேரணை தோல்வியடைந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்களும் மக்களால் தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று கருதும் அளவிற்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

எதிர்த்தரப்பினர் விடயத்தில் மாத்திரமே பாதுகாப்பு துறையினர் முறையாக செயற்படுகின்றார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பியல் நிஷாந்த சில்வா மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இதுவரையில் நீதித்துறைக்கு அவப்பெயரினை ஏற்படுத்திய மேல்மாகாண ஆளுநர் அசாத்சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோருக்கு எதிராக இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாட்டின் மீது அன்பு செலுத்தும் அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கும்



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அடிப்படைவாதம், இனவாதத்தை மீறி நாட்டிற்கு அன்பு செலுத்தும் அனைவரதும் ஒத்துழைப்புக் கிடைக்கும் என நம்புவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க எந்தக்கட்சி என்று கருத்திற்கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு வாக்களிப்பவர்களின் அடிப்படையில் யார் நாட்டை நேசிப்பவர்கள், யார் தீவிரவாதத்திற்கு ஆதரவளிப்பவர்கள் என மக்களுக்கு அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர் 90 நாட்கள் தடுப்புக்காவலில்

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய குருநாகல் பொலிஸ் நிலையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த நபரை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் குருநாகல் விசேட பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட குறித்த நபர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் நீண்டகால உறுப்பினர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நபர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் பிரதான அறிவுரையாளர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஜமால் டி ஜவ்ஷட் எனும் குறித்த நபர், 12 வருடங்களாக பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# அச்சமின்றி பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புங்கள்

## இராணுவத் தளபதி கோரிக்கை

(கொழும்பு)

இன்று 21 ஆம் திகதியின் பின்னர் மீண்டும் பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் சென்று அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சூழல் நாட்டில் ஏற்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதனால் அனைத்து மக்களுக்கும் வலுவான முறையில் இந்த வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

நாட்டில் அமைதியான சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

இன்று 21ஆம் திகதியின் பின்னர் மீண்டும் பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் சென்று அன்றாட செயற்பாடுகளை வழமையான முறையில் முன்னெடுக்குமாறும் இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதில் பெற்றோருக்கு கூடுதலான பொறுப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதால் அச்சமின்றி பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

# 754 பேர் கைது

(கொழும்பு)

வெசாக் உற்சவ காலத்தில் நாடு முழுவதுமாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 754 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் உள்ள மதுபான சாலைகளை மூடுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 8 பேரும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 264 பேரும் அத்துடன் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை உற்பத்தி செய்த மற்றும் விற்பனை செய்த மதுபான நிலையங்கள் 264 என பல்வேறு இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஹோலியை தொடரும் 10 கோடி பேர்

சமூக வலைத்தளத்தில் 10 கோடி பேர் பின் தொடரும் முதல் கிரிக்கெட் வீரர் ஆகியுள்ளார் ஹோலி.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் ஹோலி (வயது-30), சமூக வலைத்தளங்களை பொறுத்தவரையில் முக்கிய நட்சத்திரமாக உள்ளார்.

கடந்த ஆண்டு தனது மனைவியுடன் வெளியிட்ட 'கார்வா சாத்' என்ற 'டுவிட்டர்' செய்திக்கு 2,15,000 கமெண்ட்டுகள் வந்தன.

இதனிடையே ஹோலியை பல்வேறு சமூக வலைத்தளங்களில் பின்பற்றுபவர்கள் எண்ணிக்கை 10 கோடியை எட்டியுள்ளது. இன்ஸ்டாகிராமில் 3.36 கோடி, 'டுவிட்டரில்' 2.95 கோடி, பேஸ்புக்கில் 3.7 கோடி பேர் என மொத்தம் 10 கோடி பேர் வரை பின் பற்றுகின்றனர். இதையடுத்து அதிக பேர் பின் தொடரும் முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமை பெற்றார் ஹோலி.

# சிறந்த வீரர் றொனால்டோ


வெற்றிக் கிண்ணத்துடன் கிறிஸ்ரியானோ றொனால்டோ

இத்தாலியின் சீரியா 'ஏ' தொடருக்கான சிறந்த கால் பந்து வீரர் விருதை கிறிஸ்ரியானோ றொனால்டோ தட்டிச் சென்றார்.

இத்தாலியில் உள்ள கழக அணிகளுக்கு இடையே சீரியா 'ஏ' கால்பந்து தொடர் நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், கடந்த சீசனில் அசத்திய வீரர்களுக்கு, சிறந்த சீரியா 'ஏ' விருது தரப்படும்.

இம்முறை, போர்த்துக்கலின் கிறிஸ்ரியானோ றொனால்டோ வென்றுள்ளார். கடந்த 2018ல், இவர் யுவன்டஸ் அணியில் இணைந்தார். 30 போட்டிகளில் 21 கோல்கள் அடித்துள்ள றொனால்டோ, 8 முறை சக வீரர்களுக்கு கோல் அடிக்க உதவி உள்ளார். இவரின் பங்களிப்பு கைகொடுக்க, யுவன்டஸ் அணி கிண்ணம் வென்றது.

வழக்கமாக, சீசனில் போட்டிகள் அனைத்தும் முடிந்தபின், விருது வழங்கப்படும். இம்முறை, முதல் முறையாக இன்னும் இரண்டு லீக் போட்டி மீதமுள்ள நிலையில் விருது தரப்பட்டுள்ளது. இதன் மூலம், இங்கிலாந்து (பிரிமியர் லீக் - மான்செஸ்டர் யுனைடெட் அணி), ஸ்பெயின் (லா லிகா - ரியல் மட்ரிட் அணி), இத்தாலி என மூன்று நாடுகளிலும் உள்ளூர் கால் பந்து தொடரில் சிறந்த வீரர் விருதை வென்றார்.

# கிண்ணம் வென்றது இங்கிலாந்து


54 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றிய இங்கிலாந்தின் வோக்ஸ்

பாகிஸ்தானுக்கு எதிரான 5வது ஒருநாள் போட்டியில் அசத்திய இங்கிலாந்து அணி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனையடுத்து 5 போட்டிகள் கொண்ட தொடரை 4-0 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

உலகக் கிண்ணத் தொடருக்கு தயாராகும் வகையில் இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. நான்கு போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து அணி 3-0 என, ஏற்கெனவே தொடரை கைப்பற்றியது. ஐந்தாவது போட்டி லீட்சில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஒய்ன் மோர்கன், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு ஜேம்ஸ் வின்ஸ் (33), ஜானி பேர்ஸ்டோவ் (32) நல்ல ஆரம்பம் கொடுத்தனர். அபாரமாக ஆடிய ஜோ ரூட் (84), கேப்டன் மார்கன் (76) அரைசதம் கடந்தனர். ஜாஸ் பட்லர் (34), பென் ஸ்ரோக்ஸ் (21), ரொம் கர்ரான் (29ழு) ஓரளவு கைகொடுத்தனர். இங்கிலாந்து அணி 50 ஓவரில், 9 விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்கள் குவித்தது.

**வோக்ஸ் அசத்தல்**

கடின இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு கிறிஸ் வோக்ஸ் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' பகார் ஜமான் (0), அபித் அலி (5), மொஹமட் ஹபீஸ் (0) ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய பாபர் ஆஸம் (80), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (97) நம்பிக்கை அளித்தனர். சொயப் மலிக் (4) நிலைக்கவில்லை. ஆசிப் அலி (22), இமாத் வாசிம் (25) சோபிக்கவில்லை.

பாகிஸ்தான் அணி 46.5 ஓவரில், 297 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்து' தோல்வியடைந்தது. ஷஹீன் அப்ரிடி (19) ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து சார்பில் வோக்ஸ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக வோக்ஸும் தொடரின் நாயகனாக ஜேசன் ரோயும் தெரிவாகினர்




# மரண அறிவித்தல்



திருமதி
சின்னம்மா
கிருஷ்ணபிள்ளை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.11.1933 | 19.05.2019 |

புற்றளை, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை சின்னம்மா 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் யோகநாதன் (ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள அலுவலர்), குகநாதன் (அதிபர் - யா/புற்றளை ம.வி), சூரியகுமாரி, குலநாதன் (பொறியியலாளர் - கனடா), சத்தியநாதன் (அமரர்), திலகநாதன் (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணிதேவி, இந்துமதி (நிதி உதவியாளர் - பிரதேச செயலகம்), செல்வலிங்கம் (லிபேட்டி பிளாஸ்ரிக், கொழும்பு), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்தீபன் (ICT ஆசிரியர் முக்கொம்பன் மகா வித்தியாலயம், கிளிநொச்சி), சங்கவி (ICT 2ம் வருட மாணவி - யாழ்.பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்), துஷ்யந்தி (மருத்துவ பீடம் 1ம் வருட மாணவி-கொழும்பு பல்கலைக்கழகம்), மாதங்கி (A/L 2019) உயிரியல் பிரிவு மாணவி - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), அசோகன் (A/L 2020 கணிதப் பிரிவு மாணவன் - யா/ஹாட்லிக் கல்லூரி), மதுசனா, ஹரிஸ், அக்சிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர்களான சிதம்பரப்பிள்ளை, பொன்னம்பலம், வேலுப்பிள்ளை, கந்தையா மற்றும் இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2019) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6431)

புற்றளை, புலோலி.
077 704 4916, 077 622 5051

தகவல்:-
குடும்பத்தினர்

# வோல்ஷ் ரொம்ப நல்லவர்


கொர்ட்னி வோல்ஸ்

உலக கிண்ண அரங்கில் மே.தீவுகளின் கொர்ட்னி வோல்ஷ், 'ஜென்டில்மேனாக' போற்றப்படுகிறார். இதற்கு உதாரணமாக 1987ல் லாகூரில் நடந்த உலக கிண்ண லீக் போட்டியை குறிப்பிடலாம். இதில் வென்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற இக்கட்டான நிலையில் களமிறங்கிய மே.தீவுகள் அணி, 49.3 ஓவர்களில் 216 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின் சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி வோல்ஷ் 'வேகத்தில்' ஆட்டம் கண்டது. பரபரப்பான கடைசி ஓவரை இவரே வீசினார். கடைசி பந்தில் பாகிஸ்தானின் வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் தேவைப்பட்டன. அப்போது சலீம் ஜாபர், 'கிரீசை' விட்டு நீண்ட தூரம் வெளியேற நின்றார். இதனை கவனித்த வோல்ஷ், அவரை 'ரன்-அவுட்' செய்திருக்கலாம். ஆனால் விளையாட்டு உணர்வுடன் நடந்த கொண்ட இவர், முறைத்து மட்டும் பார்த்தார். 'பெயில்ஸை' தகர்க்கவில்லை. இதனை பயன்படுத்திய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்கள் எடுத்து, ஒரு விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

மே.தீவுகள் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது. ஆனாலும் வோல்ஷின் பெருந்தன்மையான செயல், கிரிக்கெட் நிபுணர்களால் பாராட்டப்பட்டது.

**தெரியுமா?**

மூன்று முறை (1987, 1996, 1999) உலக கிண்ண தொடர்களில் விளையாடிய மே.தீவுகளின் வோல்ஷ், 17 போட்டிகளில், 27 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் உலக கிண்ண அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்திய மே.தீவுகள் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். அடுத்த இரு இடங்களில் சர் அன்டி ரொபர்ட்ஸ் (26 விக்கெட்), அம்புரோஸ் (24) உள்ளனர்.

## பேச்சில் நல்லிணக்கம்; செயலில் இனவாதம்

# தமிழ் மாணவர்களின் கல்வியை குழிதோண்டிப்புதைக்கும் ஆளுநர்

## ஹிஸ்புல்லாவுக்கு எதிராக கவனயீர்ப்பு



(ஏறாவூர்)

**கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவால் கிழக்கு தமிழ் மாணவர்களின் கல்வியை குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றம்சாட்டி மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை இடம் பெற்றது. மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் வாயில் கறுப்புத் துணி கட்டியவாறு போராட்டம் நடைபெற்றது.**

கிழக்கு தமிழ் மாணவர்களின் கல்வியை குழிதோண்டி புதைக்கும் முயற்சி, கிழக்கு மாகாண ஆளுநரின் ஒருபக்க பார்வையில் பாதிக்கப்பட்டது அப்பாவி தமிழ் மாணவர்களே போன்ற கோசங்களுடன் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முற்போக்கு தமிழர் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். வியாழேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்தப் போராட்டத்தில் முற்போக்கு தமிழர் அமைப்பின் உறுப்பினர்கள், பிரதேசசபை, மாநகரசபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பேச்சில் நல்லிணக்கம்,செயலில் இனவாதம், தமிழர்களின் கல்வியை புறந்தள்ளும் கிழக்கு ஆளுநர், அழிக்காதே அழிக்காதே தமிழர்களின் கல்வியை அழிக்காதே போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை தொடர்ந்து தமிழ் பிரதேசங்களில் கடமையாற்றும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு பதிலீடுகள் இன்றி இடமாற்றம் வழங்கப்படுவதாகவும் இதனால் தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவ தாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் சுட்டிக் காட்டினார்.

முஸ்லிம் ஆசிரியர்கள் இட மாற்றம் செய்யப்பட்டால் அதற்கு பதிலீடாக தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் முஸ்லிம் பிரதேசங்களில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்கள் தமிழ் பகுதிக்கு வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கிழக்கு மாகாண தமிழ் மாணவர்களின் கல்வியை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியை கோரும் மகஜர் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது. (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் மயில்வாகனம் முத்துத்தம்பி

(ஓய்வு பெற்ற லிகிதர்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)



பிறப்பு 1935.05.11 இறப்பு 2019.05.19

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி அருளினி ஸ்ரீமயூரன் அவர்களின் பாசமிகு மாமனார் மயில்வாகனம் முத்துத்தம்பி அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

(C-6428)

பாடசாலைச் சமூகம்,
யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்,
காங்கேசன்துறை.


## இராசி பலன்

**மீனம்:** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** கடவுளை வழிபாட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** விருந்தினர்களின் வருகையுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று மகிழ்ச்சி கூடும் நாள், உடல்நலனில் கவனம் தேவை, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், தொழில் வளர்ச்சி கூடும்.

**துலாம்:** நீண்ட நாளை விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி:** கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி. புத | ராகு. செவ் |
| | | | |
| | | | |
| சனி. சந். கேது | குரு சந் | | |

சந்திராஷ்டமம் ரோகினி

21.05.2019

வைகாசி 07, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

திருதியை பின்னிரவு 3.17 மணிவரை

மூலம் பின்னிரவு 5.04 மணிவரை

சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை

இராகுகாலம் 2.52 - 4.22 மணிவரை

வளவன்



இரத்த தான முகாம், இலவச ஆயுள் வேத மருத்துவ முகாம் மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு குண்டுத்தாக்குதலில் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள உறவுகளுக்காக பிரார்த்தனையும் இடம் பெற்றது. நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெய்வேந்திரன் கிரிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், அரச அதிகாரிகள்,வைத்தியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். குறிப்பாக 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததோடு அதிகமானோர் உடல் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

## மஹோற்சவம்

கைதடி திருவருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

இவ்வாலயத்தின் சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். (இ-5)

## மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தி துரிதகதியில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

400 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாவட்ட மீன்பிடித் துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த திட்டம் மூன்று கட்டங்களாக இடம்பெற்று வருகிறது.

மயிலிட்டித் துறைமுகப் புனரமைப்பில் முதற்கட்டமாக 80 மீற்றர் வரையான துறைமுக மேடை அமைக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

குறித்த கடற் பிரதேசத்தை ஆழமாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மேலும் துறைமுகக் கட்டமைப்புக்கு ஒத்த தகவல் பரிமாற்று மையம், உள்ளக வீதி, மின்சார வசதி, சமிக்ஞை கோபுரம், தங்குமிட வசதிகள், நிர்வாகக் கட்டடங்கள், மீன் ஏல விற்பனைப் பகுதி என்பனவும் அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட கிழக்கு வீரகத்தி விநாயகர் தேவஸ் தான சங்கடஹர சதுர்த்தி விரதம் நாளை 22 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெறும்.

இவ் உற்சவம் அபிஷேகத்து டன் ஆரம்பமாகி தொடர்ந்து மூல மூர்த்தி பூசையுடன் வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருதலுடன் நிறைவடையும். (5)

## மூச்செடுக்க முடியவில்லை மயங்கி விழுந்தவர் மரணம்

(சாவகச்சேரி)

மூச்செடுக்க முடியவில்லை என்று மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணமடைந்துள்ளார்.


இந்தச் சம்பவம் சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது ஏற்கனவே அவர் இறந்துவிட்டதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணியம் சுரேந்திரன் (வயது-45) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.


சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையை பார்வையிட்ட சாவகச்சேரி பதில் நீதவான் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி. சி.தவமலர் சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி மூலம் மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ-10-114)



கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு அண்மையில் , கரணவாய் மண்டான் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரணவாய் அமைப்பாளர் துசி கலந்து கொண்டார். (படங்கள்:-கரணவாய்ச் செய்தியாளர்)



யாழ். மருதனார்மடம் ஸ்ரீராம் உடற்பயிற்சி நிலையத்தின் (ஜிம்ஸ்) 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று குருதிக் கொடை நிகழ்வு இடம்பெற்றது. வருடாந்தம் இடம்பெறும் இந் நிகழ்வில் பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டு குருதி தானம் செய்தனர். இந் நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் கோப்பாய் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நிலையில் குறித்த நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந் நிலையில் இவருக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றத்தால் மூன்று பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் கோண்டாவில் செபஸ்ரியார் வீதியில் உள்ள வீடொன்றினுள் பதுங்கியுள்ளார் எனக் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைபடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (5-10)

## கஹவத்தையில் காணாமல் போன சிறுவன் எம்பிலிபிட்டியில் கண்டுபிடிப்பு

(எம்பிலிபிட்டிய)

இரத்தினபுரி - கஹவத்தை - வெல்அதுர பிரதேசத்தில் காணாமல் போயிருந்த பாடசாலை மாணவன் ஒருவர் எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி முதல் குறித்த மாணவன் காணாமல் போயிருந்ததாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, அவர் பேருந்து ஒன்றில் ஏறி எம்பிலிபிட்டிய நோக்கிப் பயணிக்க முற்பட்டபோதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். (இ)

குண்டுத் தாக்குதல் எதிரொலி

# ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிராக சிஐடி விசாரணை

## சட்டமா அதிபர் உத்தரவு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு எதிராக விசாரணை நடத்தப்படவுள்ளது.

இவர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தேவாலயங்களில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் குண்டுத் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளதாக, முன்னரே வழங்கப்பட்ட எச்சரிக்கைகள் விடயத்தில் உயர் அதிகாரிகளாக இருந்த இவர்கள், நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டனர் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு விரைவில் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் மீது குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யப்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# அல்-கொய்தாவின் யுத்தப் பயிற்சிகள் இறுவெட்டுகளுடன் ஒருவர் கைது

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான அல்-கொய்தாவின் யுத்தப் பயிற்சிகள் தொடர்பான இறுவெட்டுகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை, திருகோணமலை ஜமாலியா பிரதேசத்தில் வைத்து, பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த இப்ராஹீம் ஷாமஹ்ரூப் (வயது- 55) என்பவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது, அல்- கொய்தா இயக்கத்தின் யுத்தப் பயிற்சிகள் அடங்கிய இறுவெட்டுகள் இரண்டு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை திருகோணமலை நீதவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# கண்டி தலதா மாளிகைக்குள் தீப்பெட்டி எடுத்துச் செல்லத்தடை



(கண்டி)

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குள் தீப்பெட்டி, லைட்டர் மற்றும் தீ பற்றவைக்கும் பொருட்களை கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதலதா மாளிகையின் பிரதான கட்டடம் பலகைகளால் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அதன் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்தத் தடை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் விளக்கு மற்றும் வாசனைகூறுகள் பற்ற வைப்பதற்காக பிரதான கட்டடத்தின் நுழைவாயிலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தலதா மாளிகைக்கு பொதிகள் கொண்டு செல்வதும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் யாத்திரிகர்களின் பொதிகளை வைத்து செல்வதற்காக பிரதான நுழைவாயிலில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# தும்மலசூரிய-ஹக்மன பகுதி விபத்துக்களில் இருவர் பலி

(கொழும்பு)

தும்மலசூரிய - ஹக்மன பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தும்மலசூரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதம்பை - குளியாப்பிட்டிய வீதியில் குளியாப்பிட்டிய நோக்கிச் சென்ற லொறி அதன் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன் போது பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

அலவ்வ பகுதியை சேர்ந்த 34 வயதுடைய சேனரத் பதிரனலாகே துசித்த குமார என்பவர் ஆவார். லொறி சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் ஹக்மன பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 63 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹக்மன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வலஸ்முல்ல - ஹக்மன வீதியில் வலஸ்முல்ல நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி ஹக்மன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

சூரியவெவ பகுதியைச் சேர்ந்த ரணசிங்க பியசேன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# போலித் தகவல்களால் குருநாகலில் குழப்பம்

## பெருமளவு இராணுவத்தினர் குவிப்பு

(குருநாகல்)

குருநாகலில் மக்கள் பதற்றமடைந்தமையால் அந்தப் பகுதியில் பெருமளவு படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தும்மலசூரிய நகரத்தில் தாக்குதல் நடத்தப் போவதாக வெளியாகிய போலியான தகவலால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இராணுவத்தினர் உட்பட பாதுகாப்பு பிரிவினர் தும்மலசூரிய பிரதேசத்தில் குவிக்கப்பட்டதாக தும்மலசூரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தும்மலசூரிய நகரத்திற்கு அருகில் கரதாவில பாலத்திற்கு அடியில் 500 வெற்று துப்பாக்கி ரவைகளை இராணுவத்தினர் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து தாக்குதல் தொடர்பான தகவல்கள் பரவத்தொடங்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலியான தகவல் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். இதனால் இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 5 ஆண்டுகளில் மலையகத்தில் 32 சிறுத்தைகள் உயிரிழப்பு

(ஹற்றன்)

கடந்த ஐந்தாண்டுகளில் மலையகப் பகுதியில் 32 சிறுத்தைகள் உயிரிழந்துள்ளதாக வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹக்கல, நல்லதண்ணி ,கீர்த்திபண்டாரபுர, பெலிஹல ஓயா,ஹோட்டன்தென்ன மற்றும் தேசிய வன பரிபாலன பகுதியில் இவ்வாறு சிறுத்தைகள் இறந்துள்ளன. இந்த வருட காலத்தில் 5 சிறுத்தைகள் இறந்துள்ளதாகவும் 2015ஆம் ஆண்டில் 10 சிறுத்தைகளும் 2016 ஆண்டில் 4 சிறுத்தைகளும் 2017ஆம் ஆண்டில் 6 சிறுத்தைகளும் மற்றும் 2018 ஆம் ஆண்டில் 7 சிறுத்தைகளும் இறந்துள்ளதாக மத்திய மாகாண வனத்துறையின் காட்டு மிருக பாதுகாப்பு அதிகாரி டி.எம். வீரசிங்க தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிகளவில் சிறுத்தைகள் ஹக்கல வனப்பகுதியில் இறந்துள்ளதாகவும் அவற்றில் 17 சிறுத்தைகள் விஷ உணவினாலும் வலைகளில் அகப்பட்டு இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக வருமானத்திற்காகத் தோட்டத் தொழிலாளர்கள் காட்டு மிருகங்களை இலகுவாக வேட்டையாட முடிந்தமையால் சிறுத்தைகள் வனப்பகுதியிலிருந்து கிராமப் பகுதிக்கு வருகை தருவதாகவும் அப்போது அப்பகுதி மக்கள் தங்களது வளர்ப்பு பிராணியைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறான உபாயத்தைக் கையாளுகின்றனர் எனவும், அத்துடன் வலையில் சிக்கும் சிறுத்தைகளின் கால் நகம், தோல் மற்றும் பற்களை ஒரு சிலர் எடுத்துச் சென்றுள்ளமை அங்கு சென்று பார்க்கும் போது தெளிவாகின்றதாக வன அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த சிறுத்தைகளால் சுற்றுச் சூழலுக்கு உள்ள நன்மைகள் பற்றியும் வன ஜீவராசிகளின் மற்றும் வனத்தில் உள்ள மரங்கள் பாதுகாக்கும் சட்டத்தின் படி இவ்வாறு செயற்படுகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு தெளிவூட்டும் வகையில் பல நிகழ்வுகளை வனத்துறையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாதுகாப்புக் கருதியே முஸ்லிம் ஆசிரியைகள் இடமாற்றப்பட்டனராம்

## ஆளுநர் ஹிஸ்புல்லா விளக்கம்

(ஏறாவூர்)



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அசௌகரியங்கள், அநீதிகளைக் கருத்திற்கொண்டே, கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் கடமையாற்றி வந்த முஸ்லிம் ஆசிரியைகளுக்கு, இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும் இந்த இடமாற்றம் தற்காலிகமானது என்றும், கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி. எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விளக்கமளித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் கடமையாற்றிவரும் முஸ்லிம் ஆசிரியைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு வருவதால் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு விளக்கமளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குலுக்குப் பின்னர், சில தமிழ் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஒரு சில தமிழ் பாடசாலைகளின் நிர்வாகிகள், முஸ்லிம் ஆசிரியைக்ளை பாடசாலைக்குள் அனுமதிக்கமுடியாது எனக் கூறியதாகவும் பாடசாலைகளின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், முஸ்லிம் ஆசிரியைகளை விரட்டி அடித்துமுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

"வெளிப்பிரதேசங்களில் கடமைபுரிகின்ற ஆசிரியர்கள் பலர், பாடசாலைக்கு அருகில் வாடகை வீடுகளில் இருந்தார்கள். அவர்களை வீடுகளை விட்டு வெளியேற்றியதாலும் அவர்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாலும் •அவர்களைத் தற்காலிகமாக வெளியேறுமாறு பொலிஸார் கூறியமையாலும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டன" என்றார்.

"சில கல்வியியலாளர்கள் பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு பாடசாலைகளில் இவ்வாறு செயற்பட வேண்டாம் எனக் கூறிய போதிலும் நகரிலுள்ள சில பாடசாலைகளில் இவ்வகையான செயல்கள் இடம்பெற்றன.

நகரிலுள்ள முஸ்லிம் ஆசிரியைகள் ஆறுபேர், பாடசாலைக்கு சென்ற போது, அவர்கள் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களது பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் வழங்க முடியாது என்று அதிபர்கள் கூறியதால், பாதுகாப்பு கருதியே. அவர்களுக்கு 2 மாதங்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டது.

"மாகாணக் கல்விப் பணிப்பாளர் விடுத்த வேண்டுகோளுக்கமைய ஆசிரியைகளை இடமாற்றுவதற்கான அனுமதியை வழங்கினேனே தவிர, எந்த ஓர் ஆசிரியரையும் நான் தன்னிச்சையாக இடமாற்றம் செய்யவில்லை" என்றும் தெரிவித்தார்.

பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், முஸ்லிம் ஆசிரியைகளை அபாய அணிந்துசெல்ல அனுமதிப்பதுடன், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பட்சத்தில், ஆசிரியைகளின் இடமாற்றத்தை இரத்துச் செய்து மீண்டும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அவர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர், கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகக் கூறினார்.

எந்த ஓர் ஆண் ஆசிரியருக்கும் தான் இடமாற்றம் வழங்கவில்லை என்றும் இது தன் மீது சுமத்தப்பட்ட வீண் பழி என்றும் ஆளுநர் தெரிவித்தார். (இ-7)

# எனக்கு 10 பாதுகாப்பு அதிகாரிகளே உள்ளனர்

## ருவான் விளக்கம்

(மினுவாங்கொடை)
அண்மையில் மினுவாங்கொடை பிரதேசத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட சென்ற பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தனது பாதுகாப்பு மற்றும் அதிகாரிகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

மினுவாங்கொடை பிரதேசத்திற்கான அமைச்சரின் விஜயத்தின் போது அதிகளவான படை வீரர்களுடன் அதிக பாதுகாப்பில் செல்லும் காணொளி வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அமைச்சர் ருவான் விஜேவர்த்தன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தனது பாதுகாப்பிற்காக



10 அதிகாரிகள் மாத்திரமே இருப்பதாகவும் இரண்டு பாதுகாப்பு வாகனங்கள் மாத்திரமே இருப்பதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன விளக்கமளித்துள்ளார். (இ-7)

# பொலிஸ் சீருடைகளை ஒத்த உடைகள் மீட்பு

(சூரியவெவ)
சூரியவெவ- மந்துனாகல பிரதேசத்திலிருந்து பொலிஸ் சீருடைகளை ஒத்த உடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட உடைகள் பொலிஸாரின் சீருடைகளை ஒத்தவையென, பொலிஸ் அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், இவை ஒரு பொலித்தீன் பையில் சுற்றியவாறு காணப்பட்டதாகவும், குறித்த பகுதி பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய இந்த உடைகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். (இ-7)

## மக்களைப் பாதுகாக்கத் தவறிய

# ஐ.தே.க. அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஜே.வி.பியின் தலைவர் அநுர திட்டவட்டம்


(கொழும்பு)
ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க அரசாங்கத்துக்கும் ஆட்சியாளர்களுக்கும் முடியாமல் போயுள்ளமையை சுட்டிக்காட்டி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

அந்தவகையில் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளிக்கவுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கு சகல கட்சிகளின் ஆதரவை கோரியிருப்ப



தாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# இனவாதத்திற்கு ஆதரவில்லை குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக அமைச்சர் றிசாத் நடவடிக்கை

(கொழும்பு)
தீவிரவாதத்திற்கும் இனவாதத்திற்கும் ஆதரவு வழங்கியதாக தன் மீது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில்



சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தான் ஒருபோதும் தீவிர வாதத்திற்கோ இனவாதத்திற்கோ ஆதரவளிக்கப்போவதில்லை எனவும் அவற்றிற்கு எதிராகச் செயற்பட முன்னிற்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றும் தேவை இல்லை

## சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து அமரவீர



(அம்பாந்தோட்டை)
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு எவ்வித தேவையும் இல்லையென, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை- கட்டுவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சரான லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு மாத்திரமே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான தேவை இருப்பதாகவும் அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

# பல்கலை. அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விரைவில்

(கொழும்பு)
2018 - 2019 ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்வி தொடர்பில் மாணவர்களை உள்வாங்குவதற்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தமுறை 31 ஆயிரத்து 500 மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் இணைத்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக ஆணைக் குழுவின் உப தலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கற்கை நெறிகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பாதுகாப்பு நிலைமைகளை கருத்திற்கொண்டு மூடப்பட்ட பல்கலைக்கழகங்கள் அடுத்த வாரத்தில் மீண்டும் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# குண்டுத்தாக்குதல் தொடர்பான தெரிவுக்குழு யோசனை ஒழுங்குப் பத்திரத்தில்

உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் போது, நாட்டின் பாதுகாப்பு நிலைமையிலிருந்த குறைபாடுகள், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதற்கான பரிந்துரைகள் உள்ளிட்டவை தொடர்பில் நியமிக்குமாறு கோரப்பட்டுள்ள தெரிவுக்குழு தொடர்பிலான யோசனை, நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆளும், எதிர்க்கட்சிகளின் பேதமின்றி, 40 பேரின் கையொப்பங்களுடன் இந்த யோசனை, சபாநாயகர் கருஜெயசூரியவிடம் கையளிக்கப்பட்டது. அதுவே, ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் தேடியறிந்து, அதுதொடர்பிலான புலனாய்வுத்துறை அறிக்கைகள், சட்டரீதியான நடவடிக்கைகள், அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ள பரிந்துரைகள் உள்ளிட்டவை மற்றும் தகவல்கள் கிடைத்தும் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்காமை உள்ளிட்டவை தொடர்பிலேயே ஆராய்ந்து அறிக்கையிடுவதற்குத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு கோரப்பட்டது.

தெரிவுக்குழுவில் 12 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக் கூடாது. சாட்சியாளர்களைத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் அழைப்பதற்காக அதிகாரத்தைக்கொண்டிருத்தல்வேண்டும். நாட்டில் எந்தவொரு பாகத்திலும் கூட்டங்களை நடத்துவதற்கும், நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் தெரிவுக்குழுவின் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தகுதியில்லாத தலைவரை தெரிவு செய்யக்கூடாது பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் அரசாங்கமே நாட்டுக்கு அவசியம்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)
தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலும், குடும்ப ஆட்சிக்கு இடம் கொடுக்காத வகையிலுமான அரசாங்கமொன்றையே இலங்கையில் அடுத்ததாக ஸ்தாபிக்க வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும், பொதுத் தேர்தலின்போதும் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக செயற்பட முற்படவில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அன்று மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். அதுவரை நாம் இந்த அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டோம்.

எவ்வாறாயினும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், குடும்ப ஆதிக்கத்துக்கு இடமில்லாத வகையிலுமான ஒரு அரசாங்கமொன்றையே நாம் அடுத்ததாக ஸ்தாபிக்க வேண்டும்.

தகுதியில்லாத தலைவரை நாட்டுக்காக தெரிவு செய்துவிடக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இவ்வாறானதொரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது.

நாம் இலங்கைப் பிரஜைகள் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றோம். எவ்வாறான சவால்கள் வந்தாலும் நாம் அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம்" என சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2019 - 15.06.2019



விகாரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிரம் பெற்றிருக்கிறார். இருப்பினும் அவர் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு இலாப ஸ்தானத்திலேயே லாபாதி பதி குருவும் இருக்கிறார். எனவே பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குருவின் பார்வை 3, 5, 8 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். ராகு- கேதுக்களின் ஆதிக்கம் மட்டும் கொஞ்சம் மேலோங்கி இருக்கின்றது.

பஞ்சம ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் உருவாகலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பிள்ளைகளாலும் விரயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. விரயாதிபதியாகவும் சனி விளங்குவதால் அதன் வக்கிர இயக்கத்தின் காரணமாக விரயத்திற்கேற்ற வரவு வந்துகொண்டே இருக்கும். குருமங்கள யோகமும், புத ஆதித்ய யோகமும் செயற்படும் இந்த மாதத்தில் மங்கல நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக மனையில் நடைபெறலாம்.

எனவே சுபச்செலவுகள் உங்களுக்கு அதிகரிக்கும்.

வெளிநாடு சென்று மேற்படிப்பு படிக்க விரும்பும் குழந்தைகளுக்கு நீங்கள் எடுத்த முயற்சி பலன்கொடுக்கும் நேரம் இது. என்ன இருந்தாலும் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதால், ஒரு சில முயற்சிகளில் முதலில் தடை ஏற்பட்டு, பிறகுதான் அது நிவர்த்தியாகும். தடைகளைத் தகர்த்தெறியும் ஆற்றல் வழிபாட்டிற்கு உண்டு. சுய ஜாதகத்தை ஒருமுறை ஆராய்ந்து பார்த்து திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை நீங்கள் மேற்கொள்ளலாம். இம் மாதக் கிரக நிலைகளின் அடிப்படையில் ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தால் நன்மைகள் கிடைக்க சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு தலைமைப் பதவிகள் தானே தேடிவரலாம். சுக்கிரனும், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உங்களுக்கு நல்ல தகவலைக் கொண்டுவந்து சேர்ப்பர். வம்பு, வழக்குகளில் இருந்து விடுபடும் வாய்ப்பும் கிடைக்கும்.

இம்மாதம் வைகாசி விசாகத் திருநாள் வருகின்றது. அந்த நாளில் கந்தன் புகழ்பாடி காரியங்களைத் தொடங்கினால் வந்த

## எதிர்பார்த்த இலாபம் தொழிலில் கிடைக்கும்

துயரங்கள் வாசலோடு நிற்கும். சொந்தங்கள் பாராட்டுமளவிற்கு வாழ்க்கைத் தரமும் உயரும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அப்பொழுது அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதிகள் பெருகும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் பலன் உண்டு. எதிர்பார்த்த வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கிடைக்கும். வரவேண்டிய பதவி உயர்வும், சம்பள உயர்வும் இப்பொழுது வந்துசேரும். பஞ்சா




யத்துக்கள் சாதகமாக முடியும் நேரமிது.

மிதுன புதனின் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அவர்களுக்கு நிரந்தர வருவாய் வரும் விதத்தில் தொழில் உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் முயற்சிகள் செய்திருந்தால் அதற்கு தக்க பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சினையில் இருந்த சுணக்கம் அகலும். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

மாதக் கடைசியில் சூரியன் மிதுனத்திற்கு சென்ற பின்னால், வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம்.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சுகஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்திற்கு ஜூன் 4 ஆம் திகதி வரப் போகின்றார். எனவே அதன்பிறகு உங்களுக்கு பலவிதங்களிலும் நன்மை கிடைக்கும். குறிப்பாக பெற்றோர்களின் ஆதரவோடு ஒருசில நல்ல காரியங்கள் நடைபெறும். கல்வித்தடை அகலும். கடை திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாக்களில் கவனம் செலுத்துவீர்கள். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் யோகம் உண்டு.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகரையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இந்த மாதம் இலாப குருவின் ஆதிக்கத்தால் பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புகள் வருவந்த உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும். அன்றாடப் பணியில் இருந்த சிக்கல்கள் அகலும். உறவினர் பகை மாறும். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பெற்றோர் வழியில் ஏற்பட்ட விரிசல்கள் மாறும். பிள்ளைகளால் பெருமை உண்டு. கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது அது கிடைக்கும். கடல்தாண்டிச் செல்லும் முயற்சிக்கு ஒருசில வாய்ப்புகள் கைகூடி வரலாம். விசாகத் திருநாள் அன்று முருகப்பெருமானை வழிபாடு செய்வதோடு சனிக்கிழமை அன்று பெருமாள், லட்சுமி, அனுமன் ஆகியோரையும் வழிபாடு செய்வது நல்லது.



விகாரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு வக்கிரம் பெற்று 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10 இல் குரு இருந்தால் பதவி மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம் போன்றவை ஏற்படும் என்பார்கள். அந்த அடிப்படையில் இப்பொழுது வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாகவே வந்து சேரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

10 ஆம் இடத்தில் சனியும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அவரோடு கேதுவும் இணைந்துள்ளார். சென்ற மாதத்தில் தொழில் ரீதியாக வந்து கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் இப்பொழுது மீண்டும் வரலாம். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். சுக ஸ்தானத்தில் செவ்வாய், ராகு இணைந்திருக்கிறார்கள். என்வே ஆரோக்கியத் தொல்லை அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் மருத்துவ ஆலோசனைகள் மூலம் குணமடையும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அவர்கள் பாகப்பிரிவினையின் பொழுது நீங்கள் விரும்பிய பங்கைக் கொடுக்க சம்மதிப்பர். இதுவரை வைத்திருந்த வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்கும் யோகம் ஒருசிலருக்கு வாய்க்கும். பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூரங்களுக்குச் சென்று பணிபுரியும் வாய்ப்பு கூட கிடைக்கும்.


புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். உங்களுடைய மேற்படிப்பிற்காக நீங்கள் எடுத்த முயற்சி இப்பொழுது வெற்றி பெறும். மாமன், மைத்துனர் வழி ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும். வக்கிரச் சனி, வக்கிர குரு ஆகியவற்றின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் அதற்குரிய வழிபாடுகளை மேற்கொண்டால் மங்கலச் செய்தியும் வந்துசேரும். வியாழன் தோறும் குரு வழிபாட்டையும், சனிக்கிழமைதோறும் சனி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

இந்த மாதம் வைகாசி விசாகத் திருநாள் அன்று சண்முக கவச பாராயணம் செய்து ஆறுமுகப்பெருமானை வழிபடுவது நல்லது.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குருபகவான் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். அப்பொழுது அதன் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் உன்னத நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். வேலையில் உள்ள வர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் வரலாம். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். சொத்துக்களால் இலாபம் கிடைக்கும் நேரம் இது. சில வருடங்களுக்கு முன்பு வாங்கிய சொத்துக்கள் இப்பொழுது பலமடங்கு உயர்ந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தும். குருபார்வை பதியும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்தி தரும்.

மிதுன புதனின் சஞ்சாரம்




மே 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். சுக ஸ்தானாதிபதி புதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில்

## மே 18 மேல் மிகச் சிறந்த பலன்

சுகங்களும், சந்தோஷங்களும் வந்துசேரும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். பகல் இரவாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். விலங்கு வளர்ப்பிலும் ஆர்வம் காட்டுவீர்கள். வீடுகட்டுவதிலும், கவனம் செலுத்துவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும். சிறு

சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூன் 4 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சில நல்ல பலன்களும் உங்களுக்கு நடைபெறும். தங்கம், வெள்ளி வாங்குவதில் யோகம் உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும் வாய்ப்பு ண்டு. வராத பாக்கிகள் வசூலாகும். வரன்கள் கூட வந்து அலை மோதும்.

இம்மாதம் வியாழன் தோறும் அறுபத்து மூவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விருச்சிக குருவின் சஞ்சாரத்திற்கு பிறகு விருப்பங்கள் நிறைவேறும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும், இலாகா மாற்றங்களும் ஒரு சிலருக்கு ஏற்படலாம். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். தடம்மாறிச் சென்ற உறவினர்கள் தானாக வந்து சேருவர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தாய்வழி ஆதரவோடு சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணிபுரியும்பெண்கள்பதவி உயர்வோடு, ஊதிய உயர்வும் காண்பீர் கள். பல நாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், குரு பகவான் வழிபாடும் நன்மை கொடுக்கும்.

(முற்றும்)

# வற்றாப்பளை அம்மன் ஆலய விசாகப் பொங்கல் உற்சவம்





(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாக பொங்கல் உற்சவம் நேற்று இடம்பெற்றது. பொலிஸார் மற்றும் முப்படை யினர் பாது காப்புக்கு மத்தியில் ஆலய உற்சவம் நேற்று இடம் பெற்றது.

நேற்றுக் காலை 3 மணிக்கு முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்திலிருந்து மடப் பண்டம் எடுத்துவரப்பட்டு ஆலய உற்சவம் ஆரம்பமாகியது.

மடப்பண்டம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. ஆலயத்திலேயே காலை பூசை மிக சிறப்பாக இடம்பெற்றது. அத்துடன் அடிய வர்கள் பால் செம்பு, காவடி, அங்கப்பிரதட்சை உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக் கடன் களை நிறைவேற்றியிருந்தனர். (9-281)



# ஹிஸ்புல்லாவை பதவி நீக்கி விசாரிக்க வேண்டும்-விஸ்ணுகாந்தன்

(குருமன்காடு)

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவை பதவியில் இருந்து நீக்கி விசாரணை செய்ய வேண்டுமென இலங்கை மக்கள்தேசியகட்சியின்செயலாளர்இவிஸ்ணுகாந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவிரவாதத்திற்கு எதிராக இந்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு இலங்கை மக்கள் தேசிய கட்சியும் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

இரண்டு வருடத்திற்கு முன்னர் அக்கரைப்பற்றில் வைத்து உண்மையாக இந்த நாட்டை நேசிக்கின்ற முஸ்லிம் சகோதரர் எனக்கு சொன்னார். ஜமாத்துல்லா என்கின்ற அமைப்பு ஒன்று இலங்கைக்கு வருகின்றது. அவர்களை எப்படியாவது தடை செய்யுங்கள் என்றார்.

ஒரு அமைப்பு வருகிறது. அவர்கள் மதத்தை கற்றுக் கொடுக்க வருகிறார்களா?, அல்லது இராணுவப் பயிற்சி கொடுக்க வருகிறார்களா?, அல்லது ஆயுதம் தயாரிக்கிறார்களா? ஏன நான் புலனாய்வுத்துறைக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன்.

இதற்கு பிரதானமான சூத்திரதாரி ஹிஸ்புல்லாவே. அவர் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியை துறந்து விட்டு ஆளு நர் என்ற போர்வையைப் போர்த்த பின்னரே தீவிரவாதத் தாக்குதல் நடந்துள்ளது. இந்த ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் அதுவும், 672 பேர் இருக்கின் றார்கள் என்ற தகவலையும் நான் புலனாய்வுத்துறைக்கு கொடுத்திருந்தேன். ஹிஸ்புல்லா அமைச்சராக இருந்த போது அவருக்கு பல தொகைப் பணங்கள் சட்ட ரீதியாகவும், சட்ட ரீதியற்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னும் இந்த அரசாங்கம் விசாரிக்கவில்லை.

75 ஆயிரம் கோடி ரூபாய் பணம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தப் பணம் வியாபாரிகளிடமும், அரசியல் வாதிகளிடமும் இருக்கிறது. இதனை கண்டுபிடிக்காது ஜனாதிபதியும், பிரதமரும் ஏன் மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். சின்ன விடயங்களுக்கே இங்கே சட்டம் இருக்கும் போது தீவிரவாதம் கொண்டு வரப்படும் போது அதனை விசாரிக்க சட்டம் இல்லையா?

சவுதிக்கு அரபு படிக்க சென்றவர்கள் தொடர்பாக விசாரியுங்கள். அவர்கள் சவுதிக்கு செல்வதாக ஆப்கானிஸ்தான் சென்று பயிற்சி எடுக்கிறார்கள். 1500 இற்கு மேற்பட்டவர்கள் அங்கு இருக்கின்றார்கள். அமைச்சர் றிசாட் பதியுதீன் அரபு கல்வி என்ற பெயரில் தனது சிபார்சு மூலம் பலரை அனுப்பி வைத்துள்ளார். இதையெல்லாம் இந்த அரசாங்கம் இதுவரை காலங்களில் ஏன் பொருட்படுத்தவில்லை. முஸ்லிம்களுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு தற்போது கண்ணீர் வடிக்கிறார் கள்.

கிழக்கை தன் கையில் கொண்டு வரவேண்டும் என்பதே ஹிஸ்புல்லாவின் நோக்கம். தாக்குதல்கள் நடந்தால் தங்களது முஸ்லிம் மக்களை பாதுகாப்பதற்காக அவர் ஆளுநர் பதவியை எடுத்தார்.

நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தொடர்ந்தும் தருவதாக இருந்தால் நீங்கள் உடனடியாக இந்த கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவை பதவி விலக்க வேண்டும். இதனை நான் பல தடவை தெரியப்படுத்தியிருக்கிறேன். இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இன்னும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும்.

அத்துடன், அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதும் விசாரணை கமிசன் அமைக்க வேண்டும். இன்று சமாதானம் ஏற்பட்ட பின்னர் றிசாத் பதியுதீன் வடமாகாணம் முழுவதும் முஸ்லிம் மக்களை குடியமர்த்தினார்.

இன்று குடியமர்த்தப்பட்ட பல குடியிருப்புக்கள் அங்குள்ள பள்ளிவாசல்கள் அனைத்திலும் இன்று ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன.

இந்த ஆயுதங்கள் எப்படி வந்தது. சாதாரணமானவொருவர் ஆயுதங்களை கொண்டு செல்ல முடியாது. கொண்டு போக வேண்டுமாக இருந்தால் சரியானதொரு பாதுகாப்பு உள்ள வாகனத்தின் மூலமே கொண்டு செல்ல வேண்டும். றிசாத் பதியுதீனுடைய ஆட்கள், அவர்களது வாகனங்களில் தான் இவை கொண்டு போயிருக்க வேண்டும். வடமாகாணத்தில் ஆயுதங்கள் எப்படி போனது. ஏன் பிடிபடவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரியின் கண்ணை மூடித்தான் இப்படி செய்துள்ளார்கள்.

எனவே இவர் தொடர் பாகவும் விசாரணை வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-250)

# பூநகரிக்கு குடிநீர் விநியோகிப்பதில் சிக்கல்

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்திற்கான குடிநீரை விநியோகிப்பதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாக பூநகரிப்பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் நிலவுகின்ற தொடர் வரட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அதாவது பூநகரிப்பிரதேசத்தில் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் தவிர, கூடுதலான இடங்களில் இவ்வாறான குடிநீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது.

அதாவது, கறுக்காய்தீவு கொல்லங்குறிச்சி, ஞானிமடம், பரமன்கிராய் வாடியடி உள்ளிட்ட கிராமங்களில் தொடர்ந்தும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

இந்தப்பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகம் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக்குடிநீர் விநியோகம் தொடர்பாக பூநகரிப்பிரதேச சபையின் தவிசாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது பிரதேச சபையின் ஊடாக ஏழு பிரதேசங்களுக்கும் பிரதேச சபை ஊடாகவும் எட்டு இடங்களுக்கும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

பிரதேச சபையினால் கறுக்காய்தீவு, ஞானிமடம், செட்டியக்குறிச்சி, பிரமன்கிராய், நெற்புலவு, வாடியடி, ஆகிய ஏழு வட்டாரங்களுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த ஏழு இடங்களுக்கும் விநியோகிப்பதற்கான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது முட்கொம்பன் பிரதேசத்திலிருந்து இந்த குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.



இந்த நிலையில் பிரதேச சபைக்குச்சொந்தமான சுமார் 14 ஆயிரம் லீற்றர் நீர்த்தாங்கி ஊர்தி பழுதடைந்துள்ளதால் சிறிய உழவு இயந்திர நீர்த்தாங்கிகள் மூலமே குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

வவுனியா கற்குழிப்பகுதியில் இளைஞன் ஒருவரை ஹெரோ யின் போதைப் பொருட்களுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமை யின் கீழ் செயற்படும் புலனாய் வுப்பிரிவுடன் போதை ஒழிப்புப் பிரிவினர் இணைந்து மேற் கொண்ட நடவடிக்கையின்போது கற்குழிப்பகுதியில் இளைஞன் ஒருவரிடமிருந்து 510 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத் திருந்த குற்றத்திற் காக 23 வயது இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளர்.

கைது செய்யப்பட்ட இளைஞ னிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடி க்கை மேற்கொள்ளப்பட்டு வருவ தாக பொலிஸார் மேலும் தெரி வித்துள்ளனர். (9-250)

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டகரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிவநகர் மூத்தோர் சங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிவநகர் மூத்தோர் சங்க அங்கத்தவர்கள் கலந்து கொண்டு சுடரினை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

(படங்கள்:சிவநகர் செய்தியாளர்)

இந்திய அரசாங்கத்தின் "இந்தியாவைஅறிவோம்" (**Know India**) திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு பொது நூலகங்களுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 70 நூல்களைக் கொண்ட ஒரு தொகுதி நூல்கள் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரனால் மூன்று மாவட்டங்களி னதும் அந்தந்த தவிசாளர்கள் மற்றும் நூலக அலுவலர்களிடம் கடந்த வாரம் வழங்கிவைக்கப்பட்டன.

## உப்புநீரில் விளக்கெரியும் அற்புதக் காட்சி



முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய வருடாந்த வைகாசி விசாக பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு பெருங்கடலில் உப்புநீரில் விளக்கெரியும் அற்புதக் காட்சிக்காக கடந்த திங்கட்கிழமை தீர்த்தம் எடுத்து வரப்பட்டு உப்புநீரில் விளக்கேற்றி ஆரம்பமான ஆலய உற்சவத்தில் அன்றைய தினம் முதல் உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதக் காட்சி பக்தர்களால் காணக்கூடியதாக உள்ளது.(9-281)

# கௌதாரிமுனையை காப்பாற்றுங்கள்

## கிராம மக்கள் அவசர கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள கௌதாரி முனை பிரதேசத்தில் மீண்டும் மணல் அகழ்வு இடம்பெறுவதனால் கிராமத்தை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொது மக்கள் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

பூநகரியில் அமைந்துள்ள கௌதாரி முனை பிரதேசத்தில் உள்ள மணல் மேடுகள் மக்களைக் கவரக்கூடிய சுற்றுலாத் துறைக்கு உரியதாகக் காணப்படுகிறது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அங்குள்ள மணல் மேடுகளிலிருந்து மணல் அகழப்பட்டு வெளியிடங்களுக்குப் பெருமளவில் எடுத்துச் செல்லப்பட்டு வந்த நிலையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தலைமையில் கடந்த வருடம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் கௌதாரி முனையிலிருந்து மணல் அகழ்வது முற்றாக தடைசெய்யப்பட்டிருந்து.

ஆனால் கடந்த சில மாதங்களாக மீண்டும் கௌதாரி முனையிலிருந்து மணல் அகழப்பட்டு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கிராமத்தில் உள்ள பொது மக்கள் தங்களின் உறுதிக் காணிகளிலிருந்து கூட மணல் அகழ்வது தடை செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

நாளாந்தம் டிப்பர்களில் அதிகளவு மணல் எடுத்துச் செல்லப்படுகிறது என்றும் கவலை தெரிவிக்கும் பொது மக்கள் இதற்கான அனுமதியை மத்திய சுற்றுச் சூழல் அமைச்சு வழங்கியிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கௌதாரி முனையின் சிறப்பே இங்குள்ள மணல் மேடுகள்தான். அதுவும் அழிக்கப்பட்டுவிட்டால் எமது கிராமத்தை எவரும் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். அத்தோடு கடல் நீர் கிராமத்திற்குள் உட்புகும் ஆபத்தும் ஏற்படும். இந்த மணல் வளம் மீண்டும் உருவாகும் வளம் அல்ல எனவும் கடந்த காலங்களில் அகழப்பட்ட இடங்களில் இன்றும் வெறுமையாகப் பற்றைகள் வளர்ந்து காணப்படுகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே கௌதாரி முனையை ஆபத்திலிருந்து பாதுகாக்க உதவுமாறு பொது மக்கள் அவசர கோரிக்கையினை அரசியல் மற்றும் அதிகார தரப்பினர்களிடம் விடுத்துள்ளனர்.(9)

### பூநகரி இலவங்குடா பகுதியில்

## இறங்குதுறை மற்றும் வெளிச்சவீட்டினை அமைத்துத் தருமாறு மீனவர்கள் கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி இலவங்குடாப் பகுதியில் இறங்குதுறையினை புனரமைத்து வெளிச்சவீடுகளை அமைத்துத்தருமாறு பிரதேச கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு உட்பட்ட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, இலவங்குடாப் பகுதியில் தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் தமது கடற்றொழில் உபகர்ணங்களையும் மீன்பிடிப்படகுகளையும் கரைசேர்ப்பதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற கடற்றொழில் இறங்கு துறைகளை ஆழப்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இந்தப்பிரதேசத்திலிருந்து கடற்றொழில்களுக்குச்செல்லும் கடற்றொழிலாளர்கள் கரைசேர்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதாவது வெளிச்சவீடுகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே இந்தப்பிரதேத்தில் வெளிச்சவீடு ஒன்றை அமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## முப்படையினருக்கு கிளிநொச்சியில் அஞ்சலி



(பரந்தன்)

இறுதி யுத்தத்தில் இறந்த முப்படையினருக்கு கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றில் நேற்று முன்தினம் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

குறித்த பள்ளிவாசலின் மௌலவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இறந்த முப்படையினரின் நினைவாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டதுடன் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (9-312)

## துணுக்காய் உயிலங்குளம் பிரதேச மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் உயிலங்குளம் பகுதியில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, இந்தப்பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைத்து வழங்கப்பட்ட மாதிரி வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தொழில் வாய்ப்பின்மை, வாழ்வாதாரமின்மை, போக்குவரத்து வசதியின்மை என்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக இவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறு சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்துத் தருமாறும் ஆட்களற்றுக் காணப்படுகின்ற வீடுகளில் அதன் உரிமையாளர்களை குடியேறுவதற்கு அல்லது வீடற்றவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறித்த குடியிருப்பு மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை விவசாய நிலங்களுக்குச் செல்கின்ற வீதியினைப் புனரமைத்துத்தருமாறும் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி துணுக்காய் அக்கராயன் குளம் வீதியைப் புனரமைத்து பேருந்து போக்குவரத்து சேவையை ஏற்படுத்தித்தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

### யாழ்.பல்கலை. வவுனியா வளாகத்தின்

## கற்றல் நடவடிக்கைகள் நாளை ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கற்றல் நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஈஸ்டர் தினத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என உயர் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியிருந்த நிலையில், தற்போது யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கற்றல் செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் விஞ்ஞான பீடம் மற்றும் வர்த்தக பீடங்களின் கற்றல் செயற்பாடுகள் நாளை 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் இன்று காலை 9 மணியில் இருந்து 3 மணிவரை வருகை தரமுடியும் எனவும் வளாக முதல்வர் தெரிவித்துள்ளார். (9-250)




## மூத்த சித்த வைத்தியர் அரியகுட்டி நாகமணி இயற்கை எய்தினார்



சித்த வைத்தியர் அரியகுட்டி நாகமணி இயற்கை எய்தினார். வன்னி பெருநிலப்பரப்பில் மூத்த ஆளுமைகளில் ஒருவரான சித்த வைத்தியர் அரியகுட்டி நாகமணி நேற்று தனது 83 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடுவில் 1936 ஆம் ஆண்டுபிறந்த இவர்சித்த வைத்திய துறையில்தனது 30 ஆவது வயதில் கால் பதித்த இவர் இயற்கை எய்தும் வரை தொடர்ந்து நோய் தீர்க்கும் மணி மந்திர ஔடத துறையில் கைதேர்ந்தவராக விளங்கினார்.

மருத்துவத்துறை மாத்திரமின்றி எமது பாரம்பரியங்களை இன்றைய தலைமுறைக்கு கொடுக்கும் ஒரு பொக்கிஷமாகவும் திகழ்ந்தார்.

இவரது சேவையை மெச்சி அகில இலங்கை சித்த மருத்துவ சபை விசாரண எனும்பட்டத்தை வழங்கிமதிப்பளித்ததோடு துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம்2014 ஆம்ஆண்டு பௌர்ணமி கலை விழாவில் சிறப்பு கௌரவத்தை வழங்கியதோடு 2017 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் பிரதேச கலாசார பேரவை ஊடாக அதி உயர் விருதாகிய மருத்துவ துறைக்கான பண்டார வன்னியன் விருதினையும் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(9-281)



வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்தின்போது தொண்டர் சேவையாற்றிய கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலய இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபை உறுப்பினர்களை பாராட்டி கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் சான்றிதழ்களை மகளிர்பிரிவு பொறுப்பாசிரியர், அதிபர்,கிளி, முல்லை. இலங்கை முதலுதவிச்சங்க மாவட்ட ஆணையாளர் வை.ஜெகதாஸ் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினால் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் கடந்த சனிக்கிழமை மாலை கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆத்மசாந்தி பிரார்த்தனை இடம்பெற்றதை தொடர்ந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்:-பரந்தன் செய்தியாளர்)


# பாரதம்

## ராஜீவ்காந்தி நினைவு தினத்தில் தமிழகத்தில் அமைதி ஊர்வலம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 28 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை காங்கிரஸ் கட்சி சார்பில் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. "முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 28 ஆவது ஆண்டுநினைவு தினத்தை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை தமிழக காங்கிரஸ் கட்சி சார்பில் அமைதி ஊர்வலம் நடைபெறுகின்றது.

இந்த அமைதி ஊர்வலத்தின் இறுதியில் பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## நாட்டுக்காக பணம் திரட்டுவது எப்படி என்று காட்டுவேன்

### இம்ரான்கான் சூளுரை



(இஸ்லாமாபாத்)

"நாட்டை வழிநடத்துவதற்கு பணம் எப்படி திரட்டுவது என்பதை காட்டுவேன். நாட்டை வழிநடத்துவதற்கான பணத்தை நாட்டிடம் இருந்தே வசூலிப்பேன்" என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் சூளுரைத்துள்ளார்.

பாகிஸ்தான் கடுமையான நிதி நெருக்கடியில் தவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலை யில் பெஷாவரில் உள்ள ஆளுநர் இல்லத்தில் பழங்குடி மாவட்டங்களின் பிரதிநிதிகளை பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், "நாட்டை வழிநடத்துவதற்கு பணம் எப்படி திரட்டுவது என்பதை காட்டுவேன்.

நாட்டை வழிநடத்துவதற்கான பணத்தை நாட்டிடம் இருந்தே வசூலிப்பேன்" என சூளுரைத்தார்.

ஓராண்டு காலத்துக்கு மேலாக பழங்குடியினர் மாவட்டங்களில் சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புகள் செயற்பாட்டில் இல்லாத போதும், அங்கெல்லாம் அமைதியை பராமரித்து வந்ததற்கு அந்த மக்களுக்கு பிரதமர் இம்ரான்கான் பாராட்டு தெரிவித்தார்.

மேலும், பழங்குடியினர் மாவட்டங்களில் பழங்குடி இன மக்களின் கலாசாரம், பாரம்பரியம் அடிப்படையில் புதிய சட்டங்களும் நிர்வாக முறையும் அமுலுக்கு கொண்டு வரப்படும் எனவும் அவர் உறுதி அளித்தார். (7)

## அருங்காட்சியகம் அருகே குண்டு வெடிப்பு சுற்றுலாப்பயணிகள் 17 பேர் படுகாயம்





எகிப்தின் கிசா பிரமிட் அருகே ஒரு சுற்றுலாப் பேருந்து ஒன்று வெடித்து சிதறியதில் இதுவரை 17 பேர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் தென்னாபிரிக்க சுற்றுலாப் பயணிகள் மற்றும் எகிப்தியர்கள் உட்பட 17 பேரே காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் உயிரிழப்பு தொடர்பாக எவ்விதத் தகவல்களும் வெளியாகவில்லை. மேலும் படுகாயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிராண்ட் எகிப்திய அருங்காட்சியகம் அருகே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த அருங்காட்சியகம் கட்டுமானத்தில் உள்ளது என்பதால் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட திறக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)


## சிறையில் கலவரம்; 32

(துஷான்பே)

தஜிகிஸ்தான் நாட்டில் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

தஜிகிஸ்தான் நாட்டில் வாக்தாத் நகரில் சிறைச்சாலை உள்ளது. இந்தச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு இடையே திடீரென தகராறு ஏற்பட்டுள்ளது. இந்தத் தகராறு பின்னர் கலவரமாக மாறியது. இந்தக் கலவரத்தில் கைதிகள் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டனர்.

இதையடுத்து பாதுகாப்புப் படையினர் அங்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் கைதிகளை சமரசம் செய்ய முயன்றனர்.



## பிரேசிலில் துப்பாக் 11 பேர் உயிரிழப்பு;

(ரியோடிஜெனிரோ)


பிரேசிலில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர்உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

பிரேசிலின் பாரா மாநிலத்தின் பெலம் நகரிலுள்ள களியாட்ட விடுதி ஒன்றிலேயே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இனந்தெரியாத ஆயுததாரிகளினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஆறு பெண்கள் உள்ளிட்ட 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும் காயமடைந்த பலர்




## குட்டி விமானம் விழுந்து விபத்து விமானி உட்பட 6 பேர் உயிரிழப்பு



(பியுனோஸ் அயர்ஸ்)

ஹோண்டுராஸ் நாட்டில் குட்டி விமானம் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் 5 பேரும் விமானியும் பலியானார்கள்.

மத்திய அமெரிக்க நாடு ஹோண்டுராஸ். இங்குள்ள சுற்றுலாத்தலமான ரோட்டான் தீவில் இருந்து குட்டி விமானம் ஒன்று நேற்று முன்தினம் அங்குள்ள ட்ருஜில்லோ நகருக்குப் புறப்பட்டது. இதில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் பயணம் செய்தனர்.

இந்த விமானம் புறப்பட்டுச்சென்ற சில விநாடிகளில் விமான கட்டுப்பாட்டு மையத்தின் தொடர்பை இழந்தது. அடுத்த சில விநாடிகளில் அந்த விமானம் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் அந்த விமானத்தில் இருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 5 பேரும் விமானியும் பலியாகி விட்டனர். தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பலியான சுற்றுலாப் பயணிகளில் 4 பேர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜோஸ் டொமிங்கோ தெரிவித்தார். 5 ஆவது சுற்றுலாப்பயணி எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது இன்னும் தெரியவரவில்லை. (7)


## ஐரே சுவி



(சுவி
சுவி
லுள்ள த
களை செ
ள்ளது.
ஐரோ
கட்டுப்பா
வரிகளு
தற்போது
பயன்பா
கொண்டு
ஐரோ
தங்கள்
ஒன்றாக
சட்டத்தில்
வதற்கா
தினம் கு
இந்த
ஆதரவா
கப்படுகி

# வெளிநாடு


## 32 பேர் உயிரிழப்பு!



ஆனால் கைதிகள் கலவரத்தை கைவிடுவதாக இல்லை. இதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 29 சிறைக் கைதிகள் மற்றும் 3 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிறையில் கலவரம் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரித்து வருவதாகவும் மேலும் கலவரம் பரவாமல் இருக்க பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## வியட்நாமில் உருவாக்கப்பட்டுவரும் மிகப்பெரிய புத்தர் சிலை



(ரங்கூன்)

தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய புத்தர் சிலை வியட்நாமில் உருவாக்கப்பட்டு வருகின்றது.


சுமார் 72 மீற்றர் உயரத்தில் 'புத்தா அமிதாபா' என்ற புத்தர் சிலையே இவ்வாறு உருவாக்கப்பட்டு வருகின்றது.

2015 இல் ஆரம்பமாகியிருந்த குறித்த சிலையின் கட்டுமானப்பணிகள் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலையில் மொத்தமாக 13 மாடிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அதில் 12 மாடிகளுக்குச் சுற்றுலாப்பயணிகள் செல்ல முடியும் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, வெண்கலத்தால் செய்யப்பட்ட மிக உயரமான புத்தர் சிலையும் வியட்நாமிலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ாக்கிப் பிரயோகம்
## பு; பலர் படுகாயம்



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் இரு குழுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

## ஈரான் தாக்குதல் நடத்தினால் அத்தோடு முடிந்து விடும்

### ட்ரம்ப் மிரட்டல்



(வோஷிங்டன்)

ஈரான் தாக்குதல் நடத்தினால், ஈரான் அத்தோடு முடிந்து விடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது டுவிட்டரில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார். அதன் பின்னர் ஈரானின் பொருளாதாரத்தை முடக்கும் வகையிலும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை ட்ரம்ப் விதித்து வருகிறார்.

இதனால் ஈரான் - அமெரிக்கா இடையேயான உறவு முற்றிலும் சீர்குலைந்தது. இந்நிலையில் சில நாட்களுக்கு முன்பு வளைகுடா நாடுகளுக்கு ஏவுகணை அமைப்புகளையும், போர்க் கப்பலையும் அமெரிக்கா அனுப்பி வைத்தது.

வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சுறுத்தல் எழுந்திருப்பதால், ட்ரம்ப் நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் நடைபெறுமா? என்ற அச்சம் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ஈரான் தாக்குதல் நடத்தினால், ஈரான் அத்தோடு முடிந்து விடும் என்று ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அத்துடன் அமெரிக்காவை மீண்டும் அச்சுறுத்த முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## ஐரோ. ஒன்றியத்திற்கு ஒத்த வகையில் சுவிஸ் துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தம்



(சுவிஸ்)

சுவிஸில் தற்போது நடைமுறையிலுள்ள துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் காணப்படும் சில வரிகளுடன் ஒத்த வகையில், சுவிஸில் தற்போது நடைமுறையிலுள்ள துப்பாக்கிப் பயன்பாட்டுச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

ஐரோப்பாவில் மிக அதிகமாக ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் நாடுகளில் ஒன்றாகக் காணப்படும் சுவிஸின் துப்பாக்கிச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் 33 வீதமானோர் ஆதரவாக வாக்களித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெரிஸ் மற்றும் பிரஸல்ஸில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து, துப்பாக்கிச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்தது.

அத்துடன், சுவிஸும் தமது சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவ்வாறு பின்பற்றாதவிடத்து ஸ்ஹேன்ஜென் பகுதியிலிருந்து சுவிஸ் நீக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே சுவிஸில் தற்போது நடைமுறையிலுள்ள துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுவிஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடு அல்ல. எனினும், ஸ்ஹேன்ஜென் பகுதியில் ஒரு அங்கமாக காணப்படுகின்றது.

26 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் விசா அல்லது கடவுச்சீட்டின்றி ஸ்ஹேன்ஜென் பகுதிக்கு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முகாம் முற்றாக அழிப்பு!

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முகாமொன்று முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் உள்ள ராவா நகரம் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்து கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டு விட்டதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், முற்றிலுமாக அழிக்கப்படாத ஐ.எஸ். பயங்கரவாதிகள் சில இடங்களில் பதுங்கி இருந்து தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், அங்குள்ள அன்பார் மாகாணத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பது மற்றும் வெடிபொருட்களை பதுக்கி வைக்கும் முகாமொன்றை இராணுவத்தினர் முற்றாக அழித்துள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது.

குறித்த முகாம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலை அடுத்து அங்கு கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனையடுத்து முகாமிலுள்ள ஏராளமான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கடுமையான இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# றிசாத்திடம் விசேட சலுகைகளை பெற்றவர்கள் பிரேரணைக்கு எதிராகவே வாக்களிப்பார்கள்

## விமல் வீரவன்ச விசனம்

**(கொழும்பு)**

**இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கைகளுக்கு ஈர்க்கப் பட்டவர்களும் அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் விசேட சலுகைகளைப் பெற்றவர்களே பாராளுமன்றத்தில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரே ரணைக்கு எதிராக வாக்களிப்பார்கள் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**





தேசிய படைவீரர் தின நிக ழ்வை முன்னிட்டு மஹரகம நக ரில் ஸ்தாபிக்கப்பட்ட படைவீரர் உருவச் சிலைக்கு நேற்று முன் தினம் மரியாதை செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத் துரைக்கையில் அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாதிக ளுக்கு தமது அரசியல் ரீதியான ஆதரவை வழங்கிய அமைச்சர் றிசாத் பதியுதீன் தண்டிக்கப்பட வேண்டும். இவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேர ணைக்கு 225 பாராளுமன்ற உறு ப்பினர்களும் கட்சி மற்றும் தமது அர சியல் சுயநலன் கருதி ஆதரவு வழங்காமல் மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வதந்திகளை நம்பி ஏமாறாமல் வெசாக் கொண்டாடிய மக்கள்

## சபாநாயகர் கரு மகிழ்ச்சி



(கொழும்பு)

தொடர் குண்டுத் தாக்குதல்க ளுடன் தொடர்புடைய பயங்கர வாதிகள் 95 வீதமானவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளதாக சபாநாய கர் கரு ஜெயசூரிய தெரிவித்துள் ளார்.

சபாநாயகர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் குண்டுத் தாக்குதலு டன் தொடர்புடைய பயங்கர வாதிகளில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புத் தரப்பு உறுதிப்படுத்தி யுள்ளதாக கரு ஜெயசூரிய சுட்டி க்காட்டியுள்ளார்.

இதேவேளை நாட்டு மக்க ளும் வதந்திகளை நம்பி ஏமாறா மல் வெசாக் கொண்டாட்டங் களைச் சிறப்பாகக் கொண்டாடி யமை பெரும் மகிழ்ச்சியை ஏற் படுத்தியுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். இதேபோன்று ஏனைய நாட்களிலும் தங்களின் செயற்பா டுகளை எந்தவொரு தயக்கமுமி ன்றி மேற்கொள்ளுமாறு மக்க ளுக்கு அவர் வலியுறுத்தியுள் ளார். (இ-7)

# முப்பரிமாணத்தில் சிகிரியா

சிகிரியாவை பார்வையிட வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சிகி ரியா நூதனசாலையிலிருந்து காசியப்பன் ஆட்சியில் சிகிரியா காணப்பட்ட விதம் குறித்த முப்ப ரிமாண அனிமேஷன் திரைக்காட் சிகளைக் காணும் வசதி ஏற்ப டுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

15 நிமிடங்கள் இந்த முப்பரி மாண அனிமேஷன் ஊடாக பண்டைய சிகிரியாவை பார்வை யிட சுற்றுலாப் பயணிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.



சுமார் ஒன்றரை வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து சிகிரியா முப்பரிமாண அனிமேஷன் மூலம் வடிவமைக்க ப்பட்டதாக இதன் தொழில்நுட்ப அதி காரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விரும்பப்படுவது எப்படி?

என்னைக் கண்டாலே எல்லோரும் விலகி ஓடுகின்றார்கள் சேர்! யாருமே நெருங்கி வருவதில்லை! என்னுடைய முகராசி அப்படி என சிலர் சொல்வதுண்டு!

இப்படிச் சொல்பவர்கள் மேல் தான் குறையே தவிர அடுத்தவர் களை இதற்காக குறை சொல்ல முடியாது.

மற்றவர்களிடம் பேசிப் பழகுவதும் ஒரு கலை. சிலருக்கு இயற்கையாகவே இது அமைந்திருக்கும். அப்படி இல்லாதவர்கள் இதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும் அவ்வளவுதான்.

சொந்தக்காரர், அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், அலுவல கத்தில் சேர்ந்து வேலை செய்பவர்கள், வீட்டில் வேலை செய்கின்ற ஆயா, காய்கறி விற்கின்ற அம்மா இப்படி எத்தனையோ பேரை பார்க்க வேண்டி இருக்கு. அவரவருக்குத் தகுந்த மாதிரி பிரியமாய் பேசிப்பழகுவது ஒரு கலை. அப்போது தான் எம்மிடம் எல்லோரும் பிரியமாக இருப்பார்கள்.

அடுத்தவர்கள் நம்மிடம் பிரியமாக இருக்க வேண்டும் என்றால் அவர்களிடம் போய் நின்று என் மேல் நீ கொஞ்சம் பிரியமா இரு என்று கேட்கக்கூடாது.

நீங்க நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து அவர்கள் உங் களை விரும்ப வேண்டும். சரி எப்படி நடந்து கொள்வது?

இனிமையாகப் பேசும் தன்மை, அடக்கமான குணம், உதவி செய்கின்ற மனப்பான்மை, பெருந்தன்மை இந்தக் குணங்கள் எல்லோருக்கும் பிடிக்கும்.

அதனால் இது மாதிரி குணங்களை வளர்த்துக் கொள்வது நல்லது. அதை விட்டுவிட்டு என் குணம் இதுதான். இதை ஏற்றுக் கொள்ளுபவர்கள் என்னுடன் வரட்டும். அதுபோதும் என்று சொன் னால் நாம் தனியாக இருக்க வேண்டியது தான்!

நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அதற்குக் கார ணம் அவர்கள் நம்மை மதிக்கவில்லை என்ற குறையாகத்தான் இருக்கும். மற்றவர்கள் நம்மை மதிக்கும் அளவிற்கு நடந்து கொண்டால் நமக்கு எல்லோருடைய பிரியமும் ஏற்படும்.

இன்னொருவரிடமுள்ள எந்தக் குணம் நமக்குப் பிடிக்கவில் லையோ அதே குணம் நம்மிடம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நான்கு பேருக்கு மத்தியில் இருக்கும் போது நாம் சிரித்தால் நிச்சயமாக மற்றவர்களுக்கும் சிரிப்பு வரும். அதனால் சிரிக்கப் பழகுவது நல்லது.

நமது வாழ்க்கையில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டு. இருந்தாலும் அவற்றுக்கு மத்தியில் நாம் சந்தோசப்படுவதற்கும் நிறைய விடயங்கள் இருக்கு! அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் முறையாக நாம் ஒருவரைப் பார்க்கின்றோம். அவர் சிரிக்கவில்லை என்றால் மிகவும் கர்வமுள்ள ஆளாக நினைக்கத் தோன்றும். அப்படி இருக்கக் கூடாது. ஒருவருக்கொருவர் கொஞ்சம் சிரித்தால் மனதிலுள்ள இறுக்கம் போய்விடும். அதன்பின் கலகல ப்பாக பேசுவதற்கு அது வசதியாக இருக்கும்.

நாம் பேசும் போது அதை மற்றவர்கள் கேட்கவேண்டும் என ஆசையா இருக்கா இல்லையா? அதேமாதிரி மற்றவர்கள் பேசு வதையும் காது கொடுத்து கேட்கவேண்டும்.

ஒரு நண்பர் நம்மிடம் சேர் இன்று வரும் வழியில் ஒரு பத்து அடி வாய்க்காலை ஒரே தாண்டா தாண்டி வந்துவிட்டேன் என அளக்க ஆரம்பித்துவிடக்கூடாது.

அது என்ன சேர் பெரிய பிரமாதம்? நான் நேற்று 20 அடி வாய்க்காலை ஒரே அடியா தாண்டி விட்டேன் என அளக்க ஆரம்பி க்கக்கூடாது.

நீங்க நிஜமாகவே 20 அடியை தாண்டியிருந்தாலும் அதை இன்னொரு சந்தர்ப்பத்திலே சொல்லியிருக்கலாமே!

சிலருக்கு அடுத்தவர்கள் செய்கின்ற நல்ல காரியமே கண்ணில தெரியாது. ஏதாவது தவறுதலாக செய்தால் அதுதான் பெரிதாக தெரியும்.

தினமும் வீட்டுக்கு காய்கறி கொடுக்கிற அம்மா எவ்வளவு நாள் நல்ல காய்கறி கொடுத்திருப்பார். அதையெல்லாம் மறந்திடுவோம். என்றாவது ஒருநாள் அவர் கொடுத்த வெண்டைக்காய் முத்தலாக இருந்தால் அதை மட்டும் அவரிடம் மறக்காமல் சொல்லுவோம். நேற்றுக் கொடுத்த கத்தரிக்காய் இளசாக இருந்தது, மிகவும் நன்றாக இருந்தது என்று சொல்லத் தோன்றுகின்றதா?

அப்படி நல்லதைப் பாராட்டும் குணத்தை வளர்த்துக் கொண் டால் நம் மேல் எல்லோருக்கும் ஒரு விருப்பம் ஏற்பட்டுவிடும்.

இன்னொரு விடயம் எல்லோருக்குமே தன்மானம் உண்டு. யாருக்குமே அவர்களைப் பற்றி விமர்சனம் செய்வது, குறையை சுட்டிக்காட்டுவது பிடிக்காது. அதை நாம் மறந்து விடக் கூடாது. இவ்வளவு விபரமும் தெரிந்த இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

ஒருத்தர் சொன்னார் சேர் நான் வீட்டிலே மிகவும் சாமர்த்தி யமாக நடந்துகொள்கின்றேன். சத்தமே போடமாட்டேன். அதனால் என் மனைவி என்னைத் திட்டுவதே இல்லை என்றார் மிகவும் பெருமையாக!

இதைக் கேட்டதும் இன்னொருத்தர் சேர் நான் எங்கள் வீட்டில் அப்படி ஒன்றும் சாமர்த்தியமாக நடந்துகொள்வதில்லை! நிறைய சத்தம் போடுவேன். அப்படி இருந்தாலும் கூட நானும் திட்டு வாங்கு வதில்லை என்றார். அது எப்படி? என ஆச்சரியமாகக் கேட்டார் அவர். அது ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை. ஏனென்றால் எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலையே! என்றார் இவர்.

# தனியாரின் காணிப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்



கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் –எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

07

இந்த வழக்கு எச்சந்தர்ப்பத்தில் எழுகின்றது என்று பார்த்தால் உரித்து இல்லாத ஒருவர் ஒரு காணியில் ஒரு வருடமும் ஒரு நாளும் அக்காணியில் பிறிதொருவரது இடைஞ்சலோ தலையீடோ இன்றி தனக்கென்றே நினைத்து அக்காணியில் வாழ்ந்திருந்தால் அவரை உரித்துள்ள ஒருவர் அல்லது பிறிதொருவர் நீதிமன்ற கட்டளையின் கீழ் அல்லாது வேறு வழிகளில் வெளியேற்ற முடியாது.

வேறு வழியில் வெளியேற்றியிருப்பின் அவ் வெளியேற்றத்தை எதிர்த்து வெளியேற்றிய திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு இடையில் இவ் வழக்கை தாக்கல் செய்து மீண்டும் அக் காணியின் உடைமையைப் பெறலாம். அதற்கு சில தேவைப்பாடுகள் உண்டு.

1. காணியின் உடைமை அவரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அல்லது இருந்திருக்க வேண்டும்.

2. அந்தக் காணிவேறு யாருக்கேனும் அல்லாமல் தனக்காகவே வைத்திருப்பதாக அவரது எண்ணம் இருக்க வேண்டும். உடைமையை பிறர் ஒருவருக்காக வைத்திருக்கக் கூடாது.

உடைமை வழக்கிற்கு தேவையானது உறுதி அல்ல. ஒரு வருடமும் ஒரு நாளும் இடைஞ்சலோ தலையீடோ இல்லாமல் ஒரு காணியை உடைமை செய்தல் என்பதேயாகும். அக்கால இடைவெளியில் அக் காணியில் தனியாக வழக்காளியே உடைமையில் இருந்திருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அவரது முன்னோரின் உடைமைக் காலத்தையும் சேர்த்துக் கணிக்கலாம். நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்றால் உறுதியுள்ளவர் தமது உறுதியை எடுத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனது காணியில் பிறிதொருவர் அத்துமீறி பிரவேசித்துள்ளார் என்று புகார் செய்வதும் பொலிஸார் அக் காணியில் உள்ளவரை அழைத்து அவரை வெளியேற்றுவதும் சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதும் நடைபெறுகிறது. உரித்துள்ளவர் உறுதியை முன்வைக்கும்போது உடைமையில் உள்ளவரிடம் ஒரு ஆவணமும் இல்லாமல் இருப்பதால் பொலிஸாராலும் ஒன்றுமே செய்ய முடியாது. பொலிஸார் இம் முறைப்பாடு உரித்து நிறுவல் வழக்கா? உடைமை நிறுவல் வழக்கா? என்பதைப் பார்ப்பதில்லை. ஆகவே, அத்தகைய சந்தர்ப்பத்தில் உடைமையிலிருந்தும் வெளியேற்றப்பட்டவர் உடனடியாக நீதிமன்றம் சென்று புகார் செய்யப்பட்டு வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும். உரித்துக்கு எதிரான வழக்கல்ல உடைமையை உறுதி செய்யும் வழக்கையே தாக்கல் செய்ய வேண்டும்.

○ உடைமை வழக்கில் வெற்றி பெற தேவையான இன்னும் சில தேவைப்பாடுகள்.

உடைமையில் இருப்பவர் பிறர் ஒருவருக்காக அந்த உடைமையில் இருக்கக் கூடாது தனது எஜமானுக்காக அல்லது முதல்வருக்காக அல்லது குத்தகையாளராக உடைமை செய்யக் கூடாது. தனக்கென்றே உடைமை செய்ய வேண்டும். தனது குடும்பத்திற்கென்றே உடைமை செய்ய வேண்டும்.

மற்றையது உடைமையினின்றும் சட்டபூர்வ வழிகளின்றி (நீதிமன்ற தீர்ப்பின்றி) வெளியேற்றப்பட்டால் ஒரு வருடத்திற்கிடையில் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

○ உடைமைக்கு எவ்வாறு நிவாரணம் கிடைக்கிறது.

1871 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க ஆட்சியுரிமைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் உடைமை அகற்றலுக்கு எதிராக நிவாரணம் உண்டு. அச்சட்டப் பிரிவு கூறுவது என்னவெனில் ஒருவர் தான் உடைமை செய்யும் காணியிலிருந்து சட்டமுறையினால் அன்றி வேறு விதமாக உடைமை அகற்றப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது சட்டபூர்வமானதாகும். ஆனால், அவ்வழக்கு ஒரு வருடத்திற்கிடையில் தான் தாக்கல் செய்யப்பட்ட வேண்டும். அவ்வாறு உடைமை அகற்றப்பட்டது உண்மையென நிரூபிக்கப்பட்டால் வழக்காளி மீண்டும் அக் காணியில் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். காணியின் உரித்து நிரூபிக்கப்படத் தேவையில்லை என்கிறது. எதிராளியின் உறுதியை இங்கு பாதுகாப்பாக எடுக்கக் கூடாது. உடைமை அகற்றுதல் என்பதன் வரைவிலக்கணம் என்ன எனப்பார்ப்போம். "உடைமையினின்றும் அகற்றுதல் என்பது அந்த காணிக்குள் செய்து வந்ததை அல்லது செய்யப்பட வேண்டியதை செய்யாமல் தடுப்பதாகும்" எனப்படுகிறது.

மேலே கூறியவை நிரூபிக்கப்படாவிட்டால் உடைமை வழங்கப்பட மாட்டாது. ஆட்சியுரிமைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு உடைமை செய்பவருக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அதனை மீறும் எதிராளியின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

அரச காணிகளுக்கு இந்நடைமுறை செல்லுபடியாகாது. 1842 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க அரச காணிச் சட்டத்தின் கீழ் அரசுக்கு எதிராக அசையாச் சொத்து சம்பந்தமாக கால வரம்பு சட்டத்தின் கீழ் உரிமை, உடைமை பெற முடியாது என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு அரச காணியில் 30 வருடங்களுக்குமேல் அபிவிருத்திசெய்து உடைமையில் இருந்தால் அரசுக்கு எதிராக நிவாரணம் கோர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

○ ஆட்சியுரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு

> ஆட்சியுரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்படி, எழுத்தில் இல்லாத ஒப்பந்தம் கொடுக்கல்-வாங்கல் என்பவற்றுக்கு மூன்று வருட காலத்திற்குள் வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆட்சியுரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்படி. எழுத்தில் இல்லாத ஒப்பந்தம் கொடுக்கல்-வாங்கல் என்பவற்றுக்கு மூன்று வருட காலத்திற்குள் வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும். பல வழக்குகளை இதன் கீழ் தாக்கல் செய்யலாம். எங்களிடம் ஆவணங்கள் இல்லை என பலர் வாழாவிருக்கின்றனர். இது தவறு. வழக்கெழு காரணம் எழுந்த திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் வழக்கைத் தாக்கல் செய்யாவிட்டால் பின்னர் வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது.

○ ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழுள்ள 5 ஆம் பிரிவு- ஈடு வைத்த காணியை உடைமையாக்கல்.

> ஈடுவைத்த காணியை உடைமையாக்க, ஆட்சியுரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதன் கீழ் அசையாச் சொத்து ஒன்றின் கீழ் ஈடு வைக்கப்பட்ட காணியை மீட்பதற்கு ஒத்துக் கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து 10 வருட காலம் முடிவடைந்தவுடன் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். சிலவேளைகளில் திகதி குறிக்காமல் எழுதப் படிருந்தால் அந்த ஈடு ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து 10 வருட காலம் முடிவடைந்த பின்னர் வழக்கைத் தாக்கல் செய்யலாம்.

ஆனால் அந்த ஈட்டிற்கு வட்டி கட்டிக் கொண்டு வந்தால் வட்டி கட்டாமல் விட்ட தினத்தில் இருந்து 10 வருடம் முடிவடைந்த பின்னர் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

○ ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் சேவக உரிமை (servitude)

ஆட்சியுரிமைச்சட்டத்தின் கீழ் ஒருவர் சேவக உரிமையைக் கோரும் போது அவர் பத்து வருடத்திற்கு மேல் அவ்வுரிமையை பாவித்து வந்ததாக நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கும் போது அவருக்கு அந்தக் காணியில் உள்ள சம்பந்தத்தை காட்டத் தேவையில்லை.

சேவக உரிமை (servitude) என்பது தனக்கு உரித்தில்லாத ஒரு காணியில் தான் உரித்தாளர் போல் செயற்படுவதாகும்.

> சேவக உரிமை (servitude) என்பது தனக்கு உரித்தில்லாத ஒரு காணியில் தான் உரித்தாளர் போல் செயற்படுவதாகும். உதாரணமாக ஒருவர் தனது காணிக்கு இன்னுமொருவரின் காணிக்குள்ளால் போய் வந்தால் தொடர்ந்தும் 10 வருடங்களுக்கு மேல் போய் வந்தால் அந்த உரிமை அவருக்கு வழங்கப்படுகிறது.

உதாரணமாக ஒருவர் தனது காணிக்கு இன்னுமொருவரின் காணிக்குள்ளால் போய் வந்தால் தொடர்ந்தும் 10 வருடங்களுக்கு மேல் போய் வந்தால் அந்த உரிமை அவருக்கு வழங்கப்படுகிறது.

முன்னைய காலங்களில் கிணற்றில் நீர் எடுக்க அல்லது குறித்த ஒரு பகுதியில் வாழும் சமூகத்தவர்கள் தனது தொழிலை செய்வதற்கு இன்னுமொருவரின் காணிக்குள்ளால் செல்வது அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும். இப்போது இச் சேவக உரிமை (servitude) குறைந்து கொண்டு போகிறது.

○ பத்து வருட காலம் ஆட்சி செய்தால் மட்டும் உரித்து வந்து விடுமா?

இலங்கையின் பல வழக்குகள் தாம் பத்து வருடகாலத்திற்கு மேல் அக்காணியில் வசித்து வந்துள்ளதாகவும் ஆகவே அந்தக்காணி எமக்குச் சொந்தமானது என்று கூறித் தாக்கல் செய்யப்படுவதை நாம் காணலாம். ஒருவர் 10 வருட காலம் ஆட்சி செய்தால் மட்டும் ஆட்சியுரிமைச் சட்டத்தில் உரித்து வந்து விடாது. அதற்கு சில தேவைப்பாடுகளும் உண்டு.

உதாரணமாக புண்ணிய ஸ்தலங்களின் கீழ் சேவையாற்றுபவர்களுக்கு அவ் ஸ்தலங்கள் வசிப்பதற்கு வீடுகளையும் மற்றும் தேவையான நிலங்களையும் வழங்குவதுண்டு. சில சமயங்களில் அதில் சேவையாற்றுபவர்கள் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்திருக்கலாம். அவர்கள் ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் தமது பகுதியின் உரித்தாளர்களாக வர முடியாது.

அவர்களது சேவையை மேற்படி நிறுவனம் அல்லது புண்ணியஸ்தலங்களின் நிர்வாகிகள் இரத்துச் செய்துவிட்டால் அன்றிலிருந்து அவர்கள் சட்ட விரோதமாகவே அங்கு குடியிருக்கின்றார்கள் என சட்டம் கூறும். அவர்களை வெளியேற்ற நிர்வாகம் நடவடிக்கை எடுப்பது வழக்கம். அப்போது அங்கு குடியிருப்பவர்கள் எடுக்கும் பாதுகாப்பு என்னவெனில் தாமும் தமது பரம்பரையினரும் 10 வருடத்திற்குமேல் அங்கு வசித்தால் தமக்கு ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் உரிமையுண்டு என்பதாகும். இதனை நீதிமன்றம் ஏற்பதில்லை. வேறு வழிகளில் அக் காணியில் மேலும் பல ஆண்டுகள் இருப்பதற்கு இடமுண்டு. அதாவது அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்கள் ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் உரிமைக் கோரிக்கையை முன்வைக்காமல் அதற்குப் பதிலாக அவர்கள் வசித்த பகுதியின் அபிவிருத்திக்கு பல நடவடிக்கைகளை அவர்கள் எடுத்ததாகவும் அவற்றிற்கு பெருமளவு பணம் செலவிட்டதாகவும் கூற வேண்டும். இதனால் அந்த நட்டஈட்டை பெறும் வரையில் அவர் அந்த இடத்தில் இருப்பதற்கு அல்லது வசிப்பதற்கு உரித்துள்ளவர் என்று தமது பதிலில் நீதிமன்றத்திற்கு கூறவேண்டும்.

○ 1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றச் சட்டம்.

1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 7 ஆம் அத்தியாயத்தின் கீழ் 66 ஆம் பிரிவு. இச் சட்டம் சம்பந்தமான விபரங்கள் "Centre for Promotion and Protection of Human Rights" என்னும் இணையத் தளத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இவ்விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 7 ஆம் அத்தியாயத்தின் கீழ் 66 ஆம் பிரிவு தொடங்கி 75 ஆம் பிரிவு வரையுள்ள பகுதிகளில் கூறப்பட்டுள்ளது என்னவெனில் காணி நிலம் சம்பந்தமாக ஏற்படுகின்ற தகராறினால் சமாதானம் குலைய அல்லது சமாதானம் குலையக் கூடிய சூழ்நிலை ஒன்று தோன்றும் போது தகராறுக்குள்ளானவர்கள் மேற்படி ஆரம்ப நீதிமன்றத்தின் பிரிவுகளின் படி நிவாரணம் பெறலாம் என்பதேயாகும். இச் சட்டம் 1980 ஆம் ஆண்டின் இல.49 மூலம் திருத்தப்பட்டது.


66 ஆம் பிரிவின் கீழ் கட்டளை வழங்கும் ஆரம்ப நீதிமன்ற வழக்குகளை பொலிஸாரும் தாக்கல் செய்யலாம். இந்த வழக்கை தனிப்பட்டவர்களும் தாக்கல் செய்யலாம். இந்த வழக்கின் நோக்கம் என்னவெனில் சமாதானக் குலைவு ஒன்று ஏற்பட்டு அமைதிக்கு பங்கம் ஏற்படாமல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதேயாகும். ஆகவே ஒரு காணி சம்பந்தமான தகராறில் அதில் இருப்பவருக்கும் உரித்தாளருக்கும் தகராறு ஏற்பட்டால் அவர்கள் இருவரும் அத்தகராறை மாவட்ட நீதிமன்றத்தில் தீர்த்துக் கொள்ளும் வரையில் அமைதியாக இருக்கவேண்டும் என்றும் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதுமேயாகும் எனலாம். ஆகவே தான், இவ்வழக்கில் நடவடிக்கை முறை பாரிய விளக்கங்களை கொண்டோ அல்லது விசாரணையைக் கொண்டோ அமையாமல் சத்தியக்கூற்றுகளின் மூலம் மூன்று மாத காலத்திற்குள் நடைபெற்று முடிவடைய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆயினும், சில வழக்குகள் மூன்று மாதங்களுக்குள் நிறைவடையாமல் இருப்பதும் உண்டு. இது சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் பொறுத்து நிகழ்கிறது. ஆனால் சட்டம் எதிர்பார்ப்பது என்னவெனில் மூன்று மாதத்திற்குள் வழக்கு நிறைவு பெற வேண்டும் என்பதாகும்.

ஆரம்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் 66 ஆம் பிரிவின் கீழான வழக்குகள் பொதுவாக காணியுடன் தொடர்புடையதேயாகும். மேலே நாம் பார்த்த உடைமை வழக்கில் உடைமை யாருக்குரியது என அவ்வழக்கை தாக்கல் செய்யும் நீதிமன்றமான மாவட்ட நீதிமன்றமே தீர்மானிக்கும். ஆனால் இங்கு 66 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டாலும் அந் நீதிமன்றம் அக்காணித் தகராறை தீர்ப்பதில்லை. அதற்குப் பதிலாக காணித் தகராறை மாவட்ட நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுமாறு கூறுவதுடன் அவ் வழக்கு மாவட்ட நீதிமன்றத்தால் தீர்க்கப்படும் வரையுமே தனது தீர்ப்பு வலுவில் இருக்கும் என்றும் கூறும் ஆகவே 66 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் தீர்ப்பானது இன்னுமொரு நீதி மன்றத்திற்கு தகராற்றுக்காரரை ஆற்றுப்படுத்துகிறது என்று கூறலாம்.

இன்னுமொரு முறையில் கூறினால் சில வழக்குகளில் வழங்கப்படும் இடைக்காலத் தடையுத்தரவுக்கு சமமானதாக விளங்குகிறது என்றும் அர்த்தம் கூறலாம்.

(தொடரும்...)

## சிகிரியாவுக்கு பயணிகளின் வருகை அதிகரிப்பு



(சிகிரியா)

சிகிரியாவை பார்வையிட வந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது நேற்று முன்தினம் பத்து ஆயிரத்துக்கும் அதிகமாக உயர்வடைந்ததாக, வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதியிலிருந்து நேற்று வரை, சிகிரியாவை பார்வையிடுவதற்கு, பணம் அறவிடப்படாமையே சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகைக்கு காரணம் என, குறித்த அமைச்சின் செயலாளர் பர்னாட் வசந்த தெரிவித்தார். (இ-7)

# முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் இந்த அரசும் அக்கறை காட்டவில்லை

## முஜிபுர் ரஹ்மான் கவலை



(கொழும்பு)

**முஸ்லிம் மக்களுக்கெதிராக இனவாதிகளால் தொடரப்படும் வன்முறைகளைத் தடுப்பதற்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களும் தவறியிருக்கின்றன. நல்லாட்சி அரசாங்கம் கூட முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை காட்டவில்லை என்ற நிலைப்பாட்டிலே முஸ்லிம்கள் இருக்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத தாக்குதல்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 21ஆம் திகதி, முஸ்லிம் என்ற பெயர் தாங்கிய குழுவொன்று வெளிநாட்டு கூலிப்படையான ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற கொலைவெறி அமைப்போடு இணைந்து கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தது. இந்தப் பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து தெற்கின் இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கெதிராக தனது வழமையான இனவாதப் பிரசாரங்களை மிக வேகமாகவும், உற்சாகத்துடனும் முன்னெடுத்திருக்கின்றன.

இதன் விளைவாகவே கடந்த 13ஆம் திகதி நாட்டின் சில பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட இனவாத தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. கடந்த காலங்களிலும் முஸ்லிம்கள் மீது இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய இனவாதத் தாக்குதல்கள் இந்நாட்டை ஆட்சி செய்த மற்றும் ஆட்சி செய்து கொண்டிருக்கும் இரண்டு அரசாங்கங்களின் காலங்களிலும் இடம்பெற்றுள்ளன. இந்த நல்லாட்சியிலும் இத்தகைய இனவாத தாக்குதல்கள் தொடர்கதையாக நிகழ்ந்து கொண்டிருப்பது வேதனை தரும் விடயமாகும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நீதித்துறையை அவமதித்த

# றிசாத், அசாத் சாலிக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

## சுசில் பிரேமஜெயந்த கேள்வி

நீதித்துறைக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் விதமாக கருத்துரைத்த மேல்மாகாண சபை ஆளுநர் அசாத் சாலி மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்டவர்கள் தொடர்பில் நீதித்துறைசார்ந்த அமைச்சர் ஏன் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்று எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த கேள்வியெழுப்பியுள்ளார்.







இன்று சட்டவாட்சிக் கோட்பாடு நடைமுறையில் செயற்படுகின்றதா? என்ற சந்தேகம் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்குச் சட்டத்தின் மீது பழி சுமத்தப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத அமைப்புக்களுடன் நீதிபதிகளுக்கும் தொடர்புண்டு என மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி பகிரங்கமாக தெரிவித்துள்ள கருத்து நீதித்துறையை அவமதிப்பதாகவே காணப்படுகின்றது. நீதிபதிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் விதமாக கருத்துரைத்துள்ளமை சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும். ஆனால் இவரது கருத்துக்கு எதிராக நீதியமைச்சர் தலதா அத்துகோரள வெறும் மறுப்பு மாத்திரமே தெரிவித்தார். மாறாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போதும் கூட அரசியல்வாதிகளின் தலையீடு அனைத்துச் செயற்பாடுகளிலும் காணப்பட்டுள்ளன. தாக்குதலுடன் தொடர்புடையவர்களாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு இராணுவத் தளபதிக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்ததாக குறிப்பிட்டமையின் பின்னணி என்ன? நெருக்கடி காலத்தில் கூட பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமைகளுக்கு விளைவுகளை ஏற்படுத்தியமையும் தண்டனைக்குரிய செயற்பாடாகும். இவ்விடயம் தொடர்பிலும் நீதியமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

வெல்லம்பிட்டி செப்பு தொழிற்சாலையில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டமையின் பின்னணியில் நிச்சயம் அரசியல் தலையீடு காணப்படுகின்றது. அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்படாமல் சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவ்விடயத்தில் நீதிமன்றத்திற்கும் தவறான விடயங்களே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் ஏன் நீதியமைச்சர் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. இன்று சாதாரண மக்களுக்கு மாத்திரமே சட்டம் முறையாக செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. பெயரவிலே சட்டவாட்சிக் கோட்பாடு செயற்படுத்தப்படுகின்றது.

அரசாங்கம் ஒரு தரப்பினருக்கு எதிராக ஆரம்பத்தில் இருந்து கொண்டு வர முனைகின்ற ஒவ்வொரு விடயங்களும் அரசாங்கத்திற்கே எதிர் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தேவையற்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போது குறிப்பிடுவது பயனற்றது.

தீவிரவாதத்தை இல்லாதொழிக்க புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்க வேண்டியதில்லை. 2015.09.29 ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவே செயற்படுகின்றது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தேவையற்றது என்று, மக்கள் மத்தியில் குறிப்பிடுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. எந்த இடத்தில் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமோ அவ்விடத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதை அமைச்சர் சஜித் பிரேமதாஸ இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பாரிய விளைவுகள் தொடர்பில் உரிய தெளிவில்லாமலேயே சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்லவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களும் போலியான கருத்துக்களை வெளியிடுகின்றனர். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளால் ஏற்படவுள்ள விளைவுகளையும் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சிறப்பியல்புகளையும் ஆளும் தரப்பினருக்கு எடுத்துரைக்கத் தயார். அரசாங்கத்தின் இயலாமையை மூடி மறைக்க சட்டத்தின் மீது குற்றம் சாட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொன்சேகாவிற்கு அமைச்சுப் பதவி

### மைத்திரியிடம் ஆவணம்



(கொழும்பு)

சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி, ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஆவணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணத்தில் 88 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமது கோரிக்கை அடங்கிய ஆவணத்தை ஒப்படைக்க ஜனாதிபதியிடம் நேரம் கோரியபோதும், ஜனாதிபதி நேரம் ஒதுக்கவில்லை என்பதால் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி வந்தபோது அவரிடம் இந்த ஆவணத்தைச் சமர்ப்பித்ததாக அவர் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகாவை நியமிக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் கோரிக்கையை, தொடர்ச்சியாக ஜனாதிபதி நிராகரித்து வருகின்ற நிலையில், கையெழுத்திட்ட ஆவணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆவணமும் ஜனாதிபதியால் நிச்சயம் நிராகரிக்கப்படும் என மைத்திரி அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

ஏனெனில் அந்த வகுப்பினரே இலங்கையிலுள்ள தமது வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதற்கும் தமது கேந்திர முக்கியத்துவம் கொண்ட கடற்படை, விமானப்படை வசதிகளைத் தொடர்ந்தும் இலங்கையில் வைத்திருப்பதற்கும் நம்பிக்கை வாய்ந்தவர்கள் எனப் பிரித்தானியர் கருதியமையே வைற்ஹோல் நிர்வாகத்தின் நடத்தைக்குக் காரணங்களாகவிருந்தன.

தனது சாம்ராச்சியத்தின் கிழக்குப் பிராந்திய நிலையங்களுடனான தொடர்புகளைப் பேணுவதற்கு வசதியாக சூயஸ் கால்வாயைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மேற்படி படைகளை இலங்கையில் வைத்திருப்பது பிரித்தானியாவுக்கு அத்தியாவசியமாகவிருந்தது.

அத்தோடு ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பெரும்பான்மையான சிங்கள மக்களைக் கொண்டுள்ள இலங்கையில் ஐம்பது வீதத்தற்கும் குறைந்த ஏனைய சிறுபான்மையினருக்கு ஐம்பதுக்கு ஐம்பது பிரதிநிதித்துவத்தை தனது வாதத் திறமையால் வாதாடிப் பெறலாம் என பொன்னம்பலம் எண்ணிச் செயற்பட்டமை அரசியல் சாணக்கியமாகாது.

அதற்குப் பதிலாக ஏற்கனவே வடமாகாணத் தமிழரால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறையோ அல்லது ஜின்னா முஸ்லிம் மக்களுக்கு ஒரு தனிநாடு வேண்டுமென்று இந்தியாவின் காங்கிரஸ் தலைவர்களுடனும் பிரித்தானியாவுடனும் விடாப்பிடியாக வாதாடியது போல் தமிழருக்கும் தமது பாரம்பரிய பிரதேசத்தில் ஒரு பூரண சுயாட்சி கேட்டு வரதாடியிருக்கலாம்.

பொன்னம்பலம் தனது திறமையின் மேல் கொண்ட அளவு கடந்த நம்பிக்கையும் பிரித்தானிய அரசு தனது கோரிக்கையை செவிமடுக்கும் என்ற அவரது தவறான எதிர்பார்ப்பும் அரசியல் முதிர்ச்சியின்மையையும் தூரநோக்கின்மையையும் அவர் தனது ஐம்பதுக்கு ஐம்பது என்ற வாய்ப்பாட்டை இறுக்கமாகப் பற்றிப் பிடித்திருந்தமையும் அவர் தன் முயற்சியில் முழுத்தோல்வியடைந்தமைக்குக் காரணங்களாக அமைந்தன என்று கொள்வதில் தவறில்லை.


மேலும் சிறுபான்மையினருக்கு ஐம்பது வீத பிரதிநிதித்துவம் வேண்டும் என பொன்னம்பலம் வாதாடிய போது மேலுமொரு முக்கியமான விடயத்தை கருத்திற் கொள்ள தவறிவிட்டார்.

அதாவது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை ஏற்கப்பட்டால் சிறுபான்மையினராகவுள்ள இந்தியத் தமிழரும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையினரின் பக்கமாகச் சாரும் பொழுது இலங் கைத் தமிழர் பிரதிநிதித்துவம் எந்த வகையிலும் தமிழரது தேவைகளுக்காக பிரதிநிதிகள் சபையில் குரலெழுப்பக்கூடிய ஒரு பலமான பிரதிநிதித்துவமாக இருக்கவும் மாட்டாது என்பதாகும்.

ஆனால் பொன்னம்பலம் 1936-1947 காலப்பகுதிகளில் சம பிரதிநிதித்துவமே தமிழரின் அரசியல் விடிவுக்கு ஒரே வழியென தமிழ் அரசியல் தலைவர்களை நம்பவைத்தார்.

1940களில் அரசாங்க சபையின் வடமாகாண அங்கத்தவரின் முக்கியமானவர்களான அருணாசலம், இராமநாதன் குடும்பத்தினராகிய அருணாசலம் மகாதேவா, எஸ்.நடேசன் உட்பட ஏனைய சிறுபான்மை யினத்தவரான மட்டக்களப்பு அரசவை பிரதிநிதியான என்.எம். சுப்பிரமணியம், தலவாக்கலை அரச சபை பிரதிநிதி எஸ். பி.வைத்திலிங்கம், இலங்கை முஸ்லிம் லீக் அங்கத்தவரும் அரசசபைப் பிரதிநிதியுமான ரி.பி.ஜயா, கொழும்பு மாநகர சபையின் மூத்த உறுப்பினர் என்.எச்.எம்.அப்துல் காதர், இந்திய அரசின் அரச சபைப் பிரதிநிதி ஐ.எக்ஸ்.பெரேரா, இலங்கை இந்தியச் சங்கத்தைச் சேர்ந்த ஜி.ஆர்.மேத்தா, இலங்கை முஸ்லிம் லீக் உப தலைவர் டாக்டர் என்.சி.எம். கலீல் போன்றோர் பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு ஆதவு வழங்கிக் கையொப்பமிட்ட 20 பக்கங்களைக் கொண்ட ஒரு மனு குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு 08 ஜூன் 1935 இல் அனுப்பப்பட்டிருந்தது.

அரச சபையில் அங்கத்துவம் வகிக்காத தலைவர்களில் எஸ். ஜே.வி. செல்வநாயகம், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோரும் தம் ஆதரவை வழங்கினர். அரச பதவி வகித்தவர்களும் ஏனைய தொழில்களில் இருந்தோரும் பொன்னம்பலத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருந்தனர்.




சேர். அன்ட்றா கல்டிகொட் (Sir Andrew Caldecott)

அத்தோடு பொன்னம்பலத்திற்கு அக்காலத்தில் முன்னணியில் நின்று செயற்பட்ட தமிழரின் அரசியலமைப்புக்களான யாழ்ப்பாணச் சங்கம், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் போன்றவற்றின் ஆதரவும் இருந்தது. இந்திய தமிழர் பிரதிநிதிகளின் ஆதரவும் முஸ்லிம் மற்றும் ஐரோப்பிய பிரதிநிதிகளின் ஆதரவும் தனக்குக் கிடைக்குமென அவர் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

*1940-44*களில் வைற்ஹோல் இரண்டு முக்கியமான பிரகடனங்களை வெளியிட்டது. முதலாவது அரசியல் சீர்திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்படும் என்பதாகும். இரண்டாவது அரசாங்கத்தின் அமைச்சரவை உள்ளக சுயாட்சி அரசாங்கம் (Internal Self- Government) ஒன்றுக்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதாகும். அவ்வாறு தயாரிக்கும் நகல் திட்டம் அரசாங்க அமைப்பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்றும் வேண்டப்பட்டது.

இவ்வேளையில் பொன்னம்பலம் தனது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு தனது சகல காரணங்களையும் சபையிலும் வெளியிலும் முன்வைத்தமையை அறியமுடிகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் 1942 இல் சேர். பரண் ஜெயதிலக அரச சபையின் தலைவர் பதவியிலிருந்து விலக அந்த இடத்திற்கு டி. எஸ்.சேனநாயக்க நியமிக்கப்பட்டார்.

பிரித்தானிய அரசியல் யாப்பில் ஆழ்ந்த அறிவும் புலமையும் மிக்க அந்நேரம் யுனிவெர்சிட்டி கொலிஜ் (University College) அதிபராகவும் அதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகவும் இருந்த சேர். ஐவர் ஜெனிங்ஸின் உதவியையும் அனுசரணையையும் மிக விவேகமான முறையில் டி.எஸ். சேன்நாயக்க பெற்றுக் கொண்டார்.

இந்நிலைமை பொன்னம்பலத் திற்கு பெரும் சவாலாக அமைந்தது. டி.எஸ். சேனநாயக்க பெரும் சாதுரியமாக சிறுபான்மையினரின் கூட்டணியை உடைப்பதில் வெற்றிகண்டார்.

(தொடரும்)

# குற்றங்கள் நிரூபிக்கப்படாமையால் றிசாத் பதவி விலகத் தேவையில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான குற்றங்கள் நிரூபிக்கப் படாமையால் அவர் பதவிவி லகத் தேவையில்லையென பிரத மர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

றிசாத்துக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளமையால், அவரை தற்காலிகமாக பதவி விலக்கி னால் மாத்திரமே தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வை பெற முடியுமென ஐ.தே.கவின் சிரே ஷ்ட உறுப்பினர்கள் பிரதமருக்கு வலியுறுத்தியுள்ளதாக கூறப்படு கின்றது.

ஆனால் குறித்த கோரிக கையை பிரதமர் மறுத்ததாகவும் தாக்குதலோ அல்லது வேறு எந்த வொரு குற்றங்களோ றிசாத் மீது முன் வைக்கப்படாமையால் அவர் பதவி விலகத் தேவை யில்லையென ரணில் கூறிய தாக தகவல் வெளியாகியுள் ளது.

அமைச்சர் றிசாத் பதியுதீன் பதவிவிலக வேண்டுமென பெரும் பாலான அரசியல்கட்சிகள், பொது அமைப்புக்கள் வலியுறுத்தி வரு கின்ற நிலையில் பிரதமர் இவ் வாறு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# கண்காணிப்பு குழுவின் அறிக்கை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு பல்கலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த பாராளுமன்ற கண்கா ணிப்புக் குழு உறுப்பினர்கள் சர்ச்சைக்குரிய பல்கலைக்கழகம் தொடர்பான அறிக்கையை இம் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கவுள் ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசுமாரசிங்க தெரி வித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்க ரவாத தாக்குதலின் பின்னர் மட்டக்களப்பு புனானை பெற்றி கம்பஸ் தொடர்பில் அதிக கவ னம் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உப குழுவின் தலைவர் பேராசிரியர் ஆசுமா ரசிங்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கடந்த வெள் ளிக்கிழமையன்று சென்று கண் காணித்ததுடன் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியா ழேந்திரன் மற்றும் திருமதி. ரோஹினி விஜயரட்ன ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இவ் விடயம் அறிந்து அங்கு சென்ற திம்புலாகல ராகுல லங்கார தேரரின் தலையீட்டால் ஊடகவியல்ாளர்கள் அங்கு பிர வேசிக்க வாய்ப்புக் கிட்டியது.

அங்கு தொடர்ந்து பேசிய



ஆசுமாரசிங்க எம்.பி. பல்வேறு அரசாங்க நிறுவனங்களை அழைத்து கலந்துரையாடவுள் ளோம். இந்த மாத இறுதிக்குள் கண்காணிப்புக் குழு அறிக் கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் 6 வாரங் களின் பின்னர் அமைச்சர வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பில் முடிவுகள் எடுக்கப் படும். இதுவே நடை முறை யாகும். 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அப்போது பிரதி அமைச்சராக இருந்த எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இந் நிறு வனத்தின் தலைவர் என்ற ரீதியில் உயர் கல்வி அமை ச்சுக்கு வேண்டுகோள் ஒன்றை முன் வைத்துள்ளார்.

கல்வி நிறுவனம் என்ற ரீதியில் அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக அரசாங்கமும் இணைந்து செயற்பட வேண்டும் என நான் தனிநபர் பிரேர ணையை முன் வைத்தேன் என ஊடகவியாளர் களிடம் கண் காணிப்புக்குழுவின் தலைவர் ஆசு மாரசிங்க மேலும் தெரி வித்தார். (இ-7)

# பூநகரி பனை தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் கட்டட அடிக்கல் நாட்டல்



(பூநகரி)

பூநகரி பனை தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் நவீன முறைகள் விற்பனை நிலையத் திற்கான அடிக்கல்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாட்டிவைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக் கீட்டில் கட்டடம் அமைக்கப்பட வுள்ளது.

பனை தென்னை அபிவி ருத்திச் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஐயம்பிள்ளை, பிரதேச செயலாளர் கிருஸ்னேந் திரன், பூநகரி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன்,உப தவிசாளர் சி.சிறிரஞ்சன்,பச்சி லைப்பள்ளி தவிசாளர் சு.சுரேன், பச்சிலைப்பள்ளி உப தவிசாளர் மு.கஜன், கிளிநொச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் த.யோக. தனராஜ்,முழங்காவில் பிரதேச அமைப்பாளர் த.குவேந்திரன், உதவி ஆணையாளரின் கணக் காய்வாளர், மட்டுவில் நாடு கிராம அலுவலர், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,பனை தென்னை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1725

### அபினவ்

பகலில் தூக்கம் வந்தால் உடம்பு பலவீனமா இருக்குன்னு அர்த்தம்! இரவு தூக்கம் வரலைனா மனசு பலவீனமா இருக்குன்னு அர்த்தம்



### ஜீவித்

இறப்பதற்குள் எப்படியும் சம்பாதித்து விட வேண்டியவை உடலை சுமக்க நாலு பேர் உள்ளத்தில் சுமக்க ஒருவரையேனும்



### தர்சிகா

பாரமாய் இருப்பதை விட தூரமாய் இருப்பது எவ்வளவோ மேல்



### கைலேஸ்

வாழ்க்கையில் துன்பங்கள் இலவசம் போன்றவை தானாகவே நம்மைத் தேடிவரும்... ஆனால் சந்தோசம் என்பது நாம் கடுமையாக போராடி வாங்க வேண்டியது



### வேணுஜா

அதிகமாக பேச நினைப்பதும் அதிகமாகப் பார்க்க நினைப்பதும் நாம் உண்மையாக நேசிப்பவர்களை மட்டுமே



### கோகுலன்

காலம் ஒவ்வொரு துன்பத்திற்குப் பின்பும் கண்டிப்பான ஏதோ ஒரு மகிழ்ச்சியை ஒளித்து வைத்திருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பர்தாவை சட்டத்தின் மூலம் தடை செய்வதை ஏற்க முடியாது



### அமைச்சர் மங்கள எதிர்ப்பு

(கொழும்பு)


**முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதை தானும் ஏற்கவில்லை என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். எனினும் பர்தா அணிவதை சட்டத்தின் மூலம் தடை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

முஸ்லிம் பெண்கள் தாமாக முன்வந்து பர்தா அணிவதை நிறுத்த வேண்டும்எனவும்அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுச் சட்டம் அல்லது குறித்த ஒரு இனத்திற்கு மாத்திரம் வேறு சட்டத்தை அமுல்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை ஷரீஆ சட்டத்தை இலங்கையில் அமுல் படுத்துவதையும் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்களாலும் புரிந்துணர்வுகளாலுமே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்த அமெரிக்கா - இலங்கை இணக்கம்



(வோஷிங்டன்)

இரு நாட்டு இராணுவத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கு அமெரிக்காவும் இலங்கையும் இணங்கியுள்ளன.

வோஷிங்டனில் நடந்த உயர் மட்டப் பேச்சுக்களையடுத்து வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இரண்டு நாடுகளும் இதனைத் தெரிவித்துள்ளன.

"ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பின் அடிப்படையில், அமெரிக்கா-இலங்கை பங்குடைமை கலந்துரையாடல் வோஷிங்டனில் இடம்பெற்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் டேவிட் ஹாலே ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தையும் இரண்டு அரசாங்கங்களும் மீள உறுதிப்படுத்தின. பங்குடைமையை மேலும் வலுப்படுத்துவதற்காக பணியாற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து. தீவிரவாதத்துக்கு எதிராக இலங்கையுடன் இணைந்து நிற்பதை வெளிப்படுத்தி அமெரிக்க ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கை மற்றும் இலங்கைக்கு உதவி வழங்குவதாக எடுக்கப்பட்ட முடிவை அமெரிக்கா மீண்டும் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவின் இந்த உதவியை இலங்கை மதிக்கிறது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பன்முக உதவிகள், எவ்.பி.ஐ. புலனாய்வாளர்களின் விசாரணை உதவிகள் மற்றும் எதிர்காலத்தில் சாத்தியமாகக் கூடிய உதவிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

அனைத்துலக சட்டங்களை மதிக்கும் வகையில் இந்தோ - பசுபிக் சமுத்திரங்களில், பாதுகாப்பான கடல் பயணங்களை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து பணியாற்றும்.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான அமெரிக்க ஆதரவு, கூட்டு இராணுவச் செயற்பாடுகள், இலங்கை அமைதி காப்பு நடவடிக்கைகள், இலங்கை அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் பயிற்சியளிப்பது மற்றும் அமெரிக்கக் கப்பல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வருகைகள் உள்ளிட்ட தற்போதுள்ள இருதரப்பு பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை இரண்டு நாடுகளும் வரவேற்றன.

நிலையான அமைதி மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் இலங்கை அர்ப்பணிப்பை அமெரிக்கா வரவேற்கிறது.

காணாமல் போனோர் பணியகம், இழப்பீடுகளுக்கான பணியகம் மற்றும் படையினர் வசமிருந்த நிலங்களை மீளளிப்பது தொடர்பான விடயங்களில் காணப்பட்டுள்ள முன்னேற்றங்களை அமெரிக்கா ஏற்றுக் கொள்கிறது.

ஜனநாயகம், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, நீதி மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளை வலுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தனது கடப்பாடுகளை வலியுறுத்தியுள்ளது.

இந்த கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா ஊக்கமளிக்கும்" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டனையும் வெளிவிவகார அமைச்சர் திலக் சந்தித்துள்ளார். (இ-7)


# இலங்கையில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் துருக்கியில் பயிற்சி பெற்றவர்களா?

(கொழும்பு)

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு, துருக்கியில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை துருக்கியின் பட்டிதுல்லா எனப்படும் பயங்கரவாத குழுவுடன் தொடர்புடைய 50 பேர் அடங்கிய குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளதென, நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ள நிலையில், குறித்த குழுவினர் தொடர்பில், எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை. எனினும் இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ரத்பத் ரஜமஹா விகாரையில் ரணில்





(கொழும்பு)

தேசிய வெசாக் உற்சவத்தை முன்னிட்டு காலி - தெல்வத்தை புராண தொடகமுவ ரத்பத் ரஜமஹா விகாரையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். (இ-7)

# செல்பி எடுத்தவாறு நீராடிய 20 வயது இளைஞன் மரணம்

(களுவாஞ்சிக்குடி)

நண்பர்களுடன் சேர்ந்து செல்பி எடுத்தவாறு நீராடிய இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகல்லாறு கடல்நாச்சி அம்மன் ஆலயத்திற்கு எதிரேவுள்ள நீரோடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் 20 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

செல்பி எடுத்தவாறு நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இந்த இளைஞன் சிறிது நேரத்தில் சேற்றில் சிக்குண்டு அதிலிருந்து வெளியேற முடியாமல் நீருக்குள் மூழ்கியுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 120 | 160 |
| தக்காளி | 140 | 120 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 140 | 100 |
| கோவா | 120 | 120 | 85 | 120 |
| கரட் | 100 | 140 | 90 | 200 |
| பூசணி | 80 | 50 | 60 | 80 |
| புடோல் | 80 | 120 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 65 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 100 |
| பயற்றங்காய் | 150 | 120 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 | 160 |
| பீற்றூட் | 140 | 80 | 90 | 160 |
| கறிமிளகாய் | 150 | 100 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 160 | 60 | 100 |
| போஞ்சி | 250 | 200 | 280 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 160 | 110 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 250 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 110 | — |




# பேராசை பெரும் நட்டம்



சிறுநாவலூர் என்னும் கிராமத்தில் சுப்பன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். கிராமத்து விவசாயிகள் எல்லோரும் நிலத்தில் பயிர் வைக்கும்போது தான் சுப்பனும் பயிர் வைப்பான்.

ஆனால் மற்ற விவசாயிகளின் நிலத்தில் விளைவதை விட அதிக விளைச்சல் சுப்பனின் நிலத்தில் ஏற்பட்டது. உணவு தானியங்களை விற்பனை செய்தபோது அவனுக்கு அதிக வருமானம் கிடைத்தது. மற்ற விவசாயிகள் எல்லோரும் சுப்பனைக் கண்டு மனம் புழுங்கினர். அவன் போடுகின்ற உரங்களைத்தானே நாமும் போடுகிறோம். நமக்கு மட்டும் ஏன் அவன் அளவு விளைச்சல் இல்லை என வாய் விட்டே பேசிக் கொண்டனர்.

சில வருடங்களிலேயே பெரிய பணக்காரனாகி விட்டான் சுப்பன். ஆனால் அவனுக்கு சந்தேகம்தான் தீரவில்லை. தன் நிலத்தில் மட்டும் எப்படி இவ்வளவு விளைச்சல் என்று யோசனை செய்தான். இந்த இரகசியத்தை எப்படியும் கண்டுபிடித்து விட வேண்டும் என நினைத்தான். ஒரு நாள் நடு இரவில் நிலத்தைப் பார்க்க கிளம்பி விட்டான். நிலத்திற்கு அருகில் உள்ள புளிய மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

விடியற்காலை நேரம் புயல் அடிப்பது போன்ற சத்தம் வானத்திலே கண்ணைக் கூசும் ஒளி. அண்ணாந்து பார்த்தான்.

இரண்டு பூதங்கள் ஆகாய மார்க்கமாக அவன் நிலத்தை நோக்கி கீழிறங்கின. அதன் முதுகுகளில் பெரிய பெரிய தங்க அண்டாக்களில் தண்ணீர்.

அந்தத் தண்ணீரை அவைகள் அவன் நிலத்தில் ஊற்றின.

அடடே இந்த தண்ணீரின் மகிமைதான் நமது நிலத்தின் விளைச்சலுக்குக் காரணம் என புரிந்து கொண்டான் சுப்பன்.

நேரே பூதங்களின் எதிரே போய் நின்றான். "ஏ பூதங்களே... நீங்கள்யார்...? ஏன் என் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகிறீர்கள்...?" என்றான் சுப்பன்.

பூதங்கள் இரண்டும், "ஐயா நாங்கள் தேவேந்திரன் சபையின் காவலாளிகள். ஒரு நாள் நாங்கள் அவர் வருவதைக் கவனிக்காமல் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டோம். அதனால் கோபம் அடைந்த தேவேந்திரன், "நீங்கள் பூமியிலே பூதங்களாக திரிந்து பன்னிரெண்டு ஆண்டுகள் உட்கார நேரமின்றி கங்கை தண்ணீரை சுமந்து வந்து யாருடைய நிலத்திலாவது பாய்ச்சி வேலை செய்து வரவேண்டும்.

அவ்வாறு பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து சாப விமோசனம் பெற்று மீண்டும் தேவலோகம் வருக என சாபம் கொடுத்து விட்டார். அன்று முதல் நாங்கள் உட்கார நேரமின்றி கங்கை நீரைக் கொண்டு வந்து உனது நிலத்தில் பாய்ச்சுகிறோம். அதனால்தான் உனக்கு அமோக விளைச்சல் கிடைக்கிறது. இப்போது நாங்கள் கங்கை நதி செல்ல கிளம்பினால் மாலையாகும். அங்கிருந்து தண்ணீர் எடுத்து வர அதிகாலை ஆகிவிடுகிறது. எங்களுக்கு உட்கார நேரமே இல்லை" என்று இரண்டு பூதமும் அழுதன.

"ஆமாம் உங்களுக்கு சாப விமோசனம் பெற இன்னும் எவ்வளவு நாள் உள்ளது" என்றான் சுப்பன்.

"இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன" என்றன பூதங்கள்.

ஐயையோ பூதங்கள் போய் விட்டால் கங்கை தண்ணீர் கிடைக்காதே. விளைச்சல் குறைந்து விடுமே. நமக்கு பணம் சேராதே. இந்தப் பூதங்களை இங்கேயே தங்கி நமக்கு வேலை செய்ய அவைகளை அடிமையாக்கத் திட்டம் போட்டான். மந்திரவாதி ஒருவனிடம் சென்று யோசனை கேட்டான்.

"அந்த பூதங்களை நீ எப்படியாவது ஒரு போத்தலில் அடைத்து விடு. பிறகு அவைகள் உனக்கே வேலை செய்ய வேண்டுமென சத்தியம் வாங்கிக் கொண்டு வெளியே விடு. பூதங்கள் சத்தியம் தவறாது" என்றான் மந்திரவாதி.

மறுநாள் இரவு நிலத்திற்குச் சென்றான் சுப்பன். பூதங்கள் இரண்டும் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தன. "ஏய் பூதங்களே... உங்களால் எவ்வளவு பெரிதாக வளர முடியும்?" என்றான்.

"நாங்கள் ஆகாயம் வரை வளர முடியும்" என்றன பூதங்கள்.

"சரி வளருங்கள் பார்க்கலாம்" என்றான் சுப்பன். பூதங்கள் ஆகாயம் வரை வளர்ந்தன.

"சரி இப்போது எவ்வளவு சிறியதாக மாற முடியும்" என்றான் சுப்பன்.

பூதங்கள் இரண்டும் கட்டெறும்பு அளவிற்கு உருமாறின.

அடுத்த நிமிடம் அவைகளை தான் வைத்திருந்த போத்தலில் போட்டு மூடி விட்டான்.

"ஐயையோ இவன் ஏதோ திட்டம் போட்டு இப்படி செய்து விட்டானே...! நாம யார் நிலத்துக்கு வேண்டுமானாலும் கங்கை நீரைப் பாய்ச்சி இருக்கலாம். ஆனால் நாம தொடர்ந்து சுப்பன் நிலத்துக்கு தண்ணீர் ஊற்றியும் நன்றியில்லை பார்த்தியா...? இனி இவனுக்காக நாம் வேலை செய்யக் கூடாது. எப்படி இவனிடம் இருந்து தப்பிக்கலாம்" என இரண்டு பூதங்களும் பேசிக் கொண்டன.

"சுப்பா எங்களை வெளியே விடு. இல்லாவிட்டால் உன் நிலத்துக்கு கங்கை நீர் கிடைக்காது. விளைச்சல் குறைந்து விடும். பழையபடி ஏழையாகி விடுவாய்" என்றன பூதங்கள்.

"நீங்கள் என்னிடமே வேலை செய்வதாக சத்தியம் செய்து கொடுத்தால் வெளியே விடுகிறேன்" என்றான் சுப்பன்.

"ஏ முட்டாள் சுப்பா... நாங்களே சாபம் பெற்று சுய உருவம் இழந்து பூதமாக இருப்பவர்கள். நாங்கள் செய்யும் சத்தியம் எங்களைக் கட்டுப்படுத்தாது.

எனவே நாங்கள் தேவலோகம் சென்று சுய உருவம் பெற்று வருகிறோம். அதன் பிறகு உனக்கு சத்தியம் செய்து தருகிறோம்" என்றன.

"சரி சரி..." என சுப்பன் போத்தலைத் திறந்து விட இரண்டு பூதங்களும் தப்பித்தால் போதுமென ஆகாய மார்க்கமாகப் பறந்தன.

ஒரு வாரம் ஓடிற்று. பூதங்கள் வரவில்லை. வயலும் கங்கை நீரின்றி வளம் இழந்து காணப்பட்டது.

சுப்பனுக்கு அதிர்ச்சி. பூதம் பொய் சொல்லுமா? சொல்லாதே. பிறகு எங்கே தவறு நடந்தது?

யோசித்தவன் அன்று இரவு தனது வயலுக்கு அருகில் இருந்த புளிய மரத்தில் ஏறி கண்காணிக்கலானான்.

நடு இரவு தாண்டிய நேரத்தில் 2 பூதங்களும் அந்த வழியாகப் பறந்து வந்தன. சுப்பனின் வயலைத் தாண்டிச் சென்று அடுத்தடுத்த வயல்களில் கங்கை நீரை நிரப்பின.

சுப்பன் அதிர்ந்தான். ஓடிப்போய் பூதங்கள் முன்பாக நின்றான். "என்னை ஏமாற்றி விட்டீர்கள். அதுமட்டுமல்லாமல் என் நிலத்தைத் தவிர்த்து வேறு வயலில் தண்ணீர் விடுகிறீர்கள். இது அநீதி" என்று கத்தலானான்.

அப்போது ஒரு பூதம் பேசியது. "மானிடப் பதரே! நீ கேட்காமலேயே உனக்கு அதிர்ஷ்டம் வந்தது.

அதன் மூலம் பலன் பெற்றாய். அதிர்ஷ்டத்துக்கான காரணம் தெரிந்தும் உனக்குள் பேராசை தலைதூக்கியது.

அதிர்ஷ்டம் எப்போதும் உனக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என்று பேராசைப்பட்டாய்.

கிடைத்த அதிர்ஷ்டத்தில் வாழ்வைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, அதிர்ஷ்டத்தையே உனக்கு அடிமைப்படுத்த எண்ணக் கூடாது.

அதிலும் உன் அணுகுமுறை எங்களை வேதனைப்படுத்தி விட்டது.

நீ எத்தனாக இருந்தால் நாங்கள் எத்தனுக்கு எத்தனாக இருப்போம்.

இனி எஞ்சிய ஆறு மாதங்களும் வேறு யாருடைய நிலத்துக்கு தண்ணீர் விட்டாலும் உன் வயல் பக்கமே எட்டிப் பார்க்க மாட்டோம்.

நீ எங்களை ஏமாற்ற எண்ணிய வகையிலேயே நாங்களும் உன்னை ஏமாற்றி விட்டோம். இப்போதாவது உனக்கு புரிகிறதா...?"

சுப்பனுக்கு பேச வார்த்தையில்லை. பேராசை பெருநட்டம் என்ற பழமொழி அவனுக்கும் தெரியும் தானே...!

## பொது அறிவுத்துணுக்குகள்

- 'புனித நகரம்' என்று அழைக்கப்படுவது, ஜெருசலேம்.
- 'பூகோள சொர்க்கம்' எனப்படும் இடம், காஷ்மீர் (இந்தியா). உலகிலேயே அதிக அளவில் மீன் பிடிக்கும் நாடு, ஜப்பான்.
- உலகின் மிகப்பெரிய தீபகற்பம், அரேபியா.
- தொலைக்காட்சி நிலையங்கள் அதிகம் உள்ள நாடு, அமெரிக்கா.
- ஜப்பான் நாட்டில் தான் அதிக அளவில் ஆட்டோக்கள் தயாரிக்கப்படுகின்றன.
- 'கிரையோஜெனிக் என்ஜின்கள்', விண்வெளி ஓடத்தில் (ரொக்கெட்) பயன்படுத்தப்படுகின்றன.
- மிகப்பெரிய பூ பூக்கும் தாவரம், 'ராப்லேசியா'.

## ஊஞ்சல் ஆடுவோம்...

ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
உயரமான மரத்திலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்

வலித்து மேலே ஏறுவோம்
வந்து கீழே சேருவோம்
குலுக்கி மரத்தை ஆடுவோம்
குருவி நுழைந்தும் ஓடுவோம்

கூடிக் கூடி ஆடுவோம்
கும்மி கொட்டிப் பாடுவோம்
தேடி வந்த சேயுடன்
சேர்ந்து ஊஞ்சல் ஆடுவோம்



தம்பி வந்து பாரெடா
தமிழும் ஊஞ்சல் ஆடுறாள்
வெம்பி வெம்பி அழுதவள்
மெத்தப் புளுகாய் ஆடுறாள்

எண்ணிப் பத்து முறைக்குமேல்
இருந்து கண்ணன் ஆடுறான்
கண்ணீர் விட்டுக் கதறுவாள்
கமலராணி ஆடட்டும்

கேடு வருமா என்று கேட்பது கோழைத்தனம்; புகழ் வருமா என்று கேட்பது தற்பெருமை ;ஆனால் மனச்சான்றோ, அறம்தானா என்றே கேட்கும். - *புன்ஷன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் ஒரு சோதனைக் காலம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால அரசியல் எவ்வாறாக அமையப் போகிறது என்ற கேள்விகளுக்கு அப்பால்,

கூட்டமைப்பின் அரசியல் சூழ்நிலை என்பது கண்டம் நிறைந்ததாகவே இருக்கிறது.

ஏலவே சர்வதேச போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது என கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் கூறிவிட, அது தொடர்பில் மிக மோசமான வாதப் பிரதிவாதங்கள் நடந்தேறின.

முதற்கோணல் முற்றிலும் கோணல் என்பது போல அன்று பிடித்த தோசம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் கூட்டமைப்பு எதிர்கொண்டது.

இதுதான் என்றால், ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற, இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதால் தமிழ் மக்களின் கடும் கோபத்துக்குக் கூட்டமைப்பு ஆளாக வேண்டியிருந்தது.

இதற்கு மேலாக, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா இரண்டு கோடி ரூபாய் பணம் வழங்கப்பட்டது என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துரைக்க, அந்த இரண்டு கோடி ரூபாயுக்கு நடந்தது என்ன என்று சமூகவலைத்தளங்கள் வறுத்தெடுக்க, எனக்கும் சம்பந்தர் ஐயாவுக்கும் இரண்டு கோடி ரூபாய் விவகாரம் தெரியாது என்று இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் கூறி நிற்க, கூட்டமைப்பு மீதான நம்பிக்கை அறவே விடுபட்டுப் போயிற்று.

இந்நிலையில் அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது முதல், தென்பகுதி இளைஞர்களுக்கு வடபகுதியிலுள்ள அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கியதை கூட்டமைப்பு எதிர்க்காதது வரையில் எல்லாமும் கூட்டமைப்புக்கு களங்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

இத்தகையதோர் சூழ்நிலையில், பாராளுமன்றக் கலைப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்துக்குச் சென்ற கூட்டமைப்பு அதுவிடயத்தில் வெற்றி பெற்றதால்,

அட்டமத்து வியாழன் வக்கிரமடைந்து ஏழாம் வீட்டுக்கு வந்ததுபோல கூட்டமைப்பு சற்றுத் தலைநிமிர்ந்தது.

என்ன செய்வது வக்கிரத்து வியாழன் மீண்டும் அட்டமத்துக்கு வந்தது மாதிரி, இப்போது அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீண்டும் கூட்டமைப்புக்குச் சோதனை தரப் போகிறது.

ஆம், அமைச்சர் றிசாத் பதியுதீனின் விடயத்தில் கூட்டமைப்பு எடுக்கப் போகும் முடிவு என்ன என்பதுதான் இப்போதிருக்கின்ற கேள்வி.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டமைப்பு ஆதரிக்க மாட்டாது; என்று முடிவெடுக்கப்பட்டால்; மன்னாரில் தமிழ் மக்களுக்கு எதிராக அமைச்சர் றிசாத் செய்த அத்தனை விடயங்களும் நியாயமானவை என்பதாக நிலைமை மாறும்.

ஆக, கூட்டமைப்பு என்ன முடிவெடுக்கும் என்பதைப் பொறுத்துத்தான் வியாழன், வீட்டுக்கு எட்டிலா; ஏழிலா என்பது தீர்மானிக்கப்படும்.

# இன்று முதல் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புங்கள்

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வலியுறுத்து

(கொழும்பு)

இன்று முதல் மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்க இடமளிக்க முடியாது. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை வீதம் குறைவடையும் பட்சத்தில் இடம்பெறவுள்ள தவணை பரீட்சைகள் உள்ளிட்ட க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகள், ஏனைய கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகவே இன்று முதல் மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் எக் காரணம் கொண்டும் இரண்டாம் தவணை பரீட்சை உள்ளிட்ட ஏனைய பரீட்சைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்றும் பரீட்சைகள் உட்பட மாணவர்களின் விடுமுறைகள், ஏனைய கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் இன்று கூடவுள்ள கல்வி அமைச்சின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

### ஈஸ்டர் தின தாக்குதல் எதிரொலி

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாக பொங்கல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இராணுவம் பொலிஸார், முப்படைகளின் உயர் பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றபோதும் ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வழமையாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் உட்புறப் பகுதியிலேயே மிக நெருக்கமாக பக்தர்கள் தொகை இருக்கின்றபோதும் நேற்றைய தினம் ஆலய வளாகம் பக்தர்கள் இல்லாது வெறிச்சோடி காணப்பட்டது. (ம-281)

## ஜனாதிபதி மைத்திரியின் கனேடிய விஜயம்

### இறுதி நேரத்தில் இரத்து

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கனடாவிற்கான விஜயம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒட்டாவாவில் இடம்பெறவிருந்த மாநாடொன்றில் பங்கேற்கும் வகையில் எதிர்வரும் 29ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கனடாவிற்கு செல்வதற்கு திட்டமிட்டிருந் தார்.

இதன்போது கனேடிய பிரதமரையும் சந்தித்து பேசுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார்.

எனினும், கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ருடோவை சந்திக்க நேரம் கிடைக்காமை காரணமாகவே, ஜனாதிபதியின் கனடாவிற்கான விஜயம் இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ம-3)

## கடந்த 4 மாதத்தில் சிகரட் மூலம் அரசுக்கு 26 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிகரட் இறக்குமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிகரட் பயன்பாடு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிலோன் புகையிலை நிறுவனம் அறிவித்துள்ளது.

சிகரட்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டமை இந்த பயன்பாடு குறைவுக்கு காரணம் எனவும் அந்நிறுவனம சுட்டிக்காட்டியுள்ளது. சிகரட் விற்பனை குறைவடைந்துள்ள போதிலும் சிலோன் புகையிலை நிறுவனத்தின் வருமானம் அதிகரித்துள்ளதாகவும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிலோன் புகையிலை நிறுவனத்தின் மூலம் இவ் வருடத்தின் முதல் காலாண்டில் மாத்திரம் 26 பில்லியன் ரூபாய் வருமானம் அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம-3)

## அச்சத்தை ஏற்படுத்தி ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்த அரசாங்கம் முயற்சி

### பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்துவதற்காகவே, அரசாங்கம் மக்களுக்கு தேவையில்லாத அச்ச உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே பந்துல குணவர்த்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது.

அரசாங்கம் தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்காகவே முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின்தேசிய பாதுகாப்பை ஸ்தாயிக்குமாறு எம்மால் அழுத்தங்களை மட்டுமே விடுக்க முடியும். ஆனால், அரசாங்கம் அதனை செய்ய தவறி வருகிறது.

இந்த நாட்டில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய தலைவராக மகிந்த ராஜபக்ஷ திகழ்ந்து வருகிறார். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக்கொண்டு வந்ததிலிருந்து 2014ஆம் ஆண்டுவரையான அவரது காலத்தில் மின்பிறப்பாக்கி கூட இலங்கையில் வெடித்ததில்லை.

இவ்வாறான ஒருவரிடம் நாட்டை மீளவும் கையளிக்க வேண்டுமெனில், ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும். இதிலிருந்து அரசாங்கம் விடுபடவே முடியாது.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாத காரணத்தினால்தான், மக்களுக்கு அச்ச உணர்வை அரசாங்கம் ஏற்படுத்தி வருகிறது.

ஆனால், இதனைவிட பாரிய அச்சுறுத்தல்களுக்கு மக்கள் 1989ஆம் ஆண்டு தேர்தலின்போது முகம் கொடுத்துள்ளார்கள்.

அவ்வாறான நிலையில் கூட மக்கள் தமது ஜனநாயகக் கடமையை அன்று நிறைவேற்றினார்கள்.

இதேபோல, எவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்தாலும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகிறோம் என பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஒழுக்கத்தை வலியுறுத்தியதோடு, அதை கடைப்பிடித்தவர்களில் புத்தருக்கு இணையானவர் வேறு யாருமில்லை.
- ஆன்மீகம் என்பது அனுபவித்து அறியும் விஷயமே அன்றி, வெறும் பேச்சு மட்டுமன்று.
- இரும்பைப் போன்ற உறுதி, மலையைப் போன்ற வலிமை இருந்தால் கடலையும் கடக்கலாம்.
- அறிவு வளர்ச்சிக்கு ஒரே வழி தான் இருக்கின்றது . அது மனதை ஒருமுகப்படுத்துவது மட்டும் தான்.
- அன்பில்லாதவன் பெற்ற உலகியல் அறிவும் ஆன்மீக ஞானமும் பயனற்றது. அவனால், கடவுளை ஒருபோதும் அடைய முடியாது.

# உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட அணியில் தர்சினி - எழிலேந்தினி இணைவு




உலகக் கிண்ண வலைப் பந்தாட்டத் தொடரில் பங்கேற்க வுள்ள இலங்கை அணியில் வட மாகாணத்தைச் சேர்ந்த தர்ஜினி சிவலிங்கம் மற்றும் எழிலேந்தினி சேதுகாவலர் ஆகிய இருவரும் இடம்பிடித் துள்ளனர்.

15 ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடர் இங்கிலாந்தின் லிவர்பூலில் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் ஏ குழுவில் இடம் பெற்றுள்ள இலங்கை அணி, உலக வலைப்பந்தாட்ட தரவரி சையில் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா, வட அயர் லாந்து, சிம்பாவே ஆகிய அணி களுடன் பலப்பரீட்சை நடத்த வுள்ளது.

இம்முறை உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள 12 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வலைப்பந்தாட்ட உல கில் அதி சிறந்த சூட்டர் வீராங் கனை என்ற பெருமைக்குரிய வரும் ஆசியாவிலேயே அதி உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கம் மிகப் பெரிய எதிர் பார்ப்புக்கு மத்தியில் இம்முறை உலகக் கிண்ணத்தில் இல ங்கை அணிக்காக களமிறங்க வுள்ளார்.

கடந்த வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந் தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் 3 வருடங்களுக்குப் பிறகு இல ங்கை அணியில் இடம்பிடித்த தர்ஜினி, இலங்கை அணிக்கு சம்பியன் பட்டத்தை வென்று கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

இதேவேளை, அண்மைக் காலமாக தேசிய மற்றும் சர்வ தேச மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பிரகாசித்து வரு கின்ற வட மாகாணத்தைச் சேர்ந்த இளம் வீராங்கனை யான எழிலேந்தினி சேது காவ லர் முதற்தடவையாக உலகக் கிண்ண இலங்கை வலைப் பந்தாட்ட குழாத்தில் இடம்பிடித் துள்ளார்.

கடந்த வருடம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்ற நான்கு அணிகள் பங்குகொண்ட நட்பு ரீதியிலான அழைப்பு வலைப்பந்தாட்டத் தொடரில் இலங்கை அணிக்காக அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட எழிலேந்தினி, அதன்பிறகு நடை பெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டித் தொட ரிலும் அண்மையில் நிறை வுக்கு வந்த கென்யா, மலேசியா மற்றும் இலங்கை இளையோர் வலைப்பந்தாட்ட அணிகள் பங்கு கொண்ட நட்பு ரீதியிலான அழை ப்பு வலைப்பந்தாட்டத் தொடரிலும் விளையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# இறுதிப் போட்டிக்கு தெரிவானது நாமகள் இளைஞர் கழக அணி



தெல்லிப்பழை பிரதேச செயல கப் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்ய ப்பட்ட இளைஞர் கழகங் களுக்கி டையிலான கால் இறுதிப்போட்டி கடந்த 19 ஆம் திகதி நடை பெற்றது.

இறுதிப் போட்டியில் நாமகள் இளைஞர் கழகம் பன்னாலை கணேசன் இளைஞர் கழக அணியை 2-0 என வெற்றி கொண்டு அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அணி சார்பாக யஸ்மிலன். சஜித் தலா 1 கோல் பதிவு செய்த னர். அரையிறுதிப் போட்டியில் வித்தகபுரம் கண்ணகி இளை ஞர் கழக அணியை 2:0 என வெற்றி பெற்று இறுதிப் போட்டி க்கு தகுதி பெற்றது இளைஞர் கழக அணி. எமது அணி சார் பாக யஸ்மிலன். தனுஜன் தலா 1 கோல் பதிவு செய்தனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 1500 மீற்றர் ஓட்டம் தங்கம் வென்றார் சுஜிகரன்




யாழ். மாவட்ட பிரதேச செய லகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சு.சுஜிகரன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதேச செய லகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப் பாணம் துரையப்பா விளை யாட்டு மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சு.சுஜிகரன் தங்கப் பதக்கத்தை யும் மருதங்கேணி பிரதேச செய லகத்தைச் சேர்ந்த க.கரன்ராஜ் வெள்ளி பதக்கத்தையும் கர வெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.சிவதர்சன் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றி னார்கள். (க-60)

# அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் கெந்தி அடித்தல் போட்டி முடிவுகள்



அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு விழாவை முன் னிட்டு பாலேந்திரன் பால்ராஜ் ஆதரவில் ஆண்களுக்கான கெந்தியடித்தல் போட்டியில் முத லாம் இடத்தை அருணோதயா சனசமூக நிலையமும் இரண் டாம் இடத்தை திருமகள் சன சமூக நிலையமும் மூன்றாம் இடத்தை அரியாலை காந்தி சனசமூக நிலையமும் பெற்றுக் கொண்டது.

மற்றும் சிறிதரன் - வக் ஸ்ஷலன் ஆதரவில் நடைபெற்ற பெண்களுக்கான கெந்தியடித்தல் போட்டியில் நாவலடி உதய ஒளி சனசமூக நிலையம் முதலாம் இடத்தையும் அருணோதயா சனசமூக நிலையம் இரண்டாம் இடத்தையும் அரியாலை சன சமூக நிலையம் மூன்றாம் இடத் தையும் பெற்றுக்கொண்டது. (க)

# சுமித்தின் ஆட்டம் சச்சினை நினைவுபடுத்தியது



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர், ஸ்டீவ் சுமித்தின் ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கரைப் பார்த்ததாக தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இன்னும் 10 நாட்களில் தொடங்க உள்ள நிலையில், ஒவ்வொரு அணியும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின் றன.

அவுஸ்திரேலிய அணி யைப் பொறுத்தவரையில், ஸ்டீவ் சுமித் மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோர் தடைக் குப் பின்னர் உலகக்கோப் பையில் களமிறங்குவது ரசிகர் களிடையே எதிர்பார்ப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

குறிப்பாக, வோர்னர் ஐ.பி. எல் தொடரில் 500 ஓட்டங்க ளுக்கு மேல் குவித்து விஸ்வ ரூபம் எடுத்தார்.

இந்நிலையில், அவுஸ்தி ரேலிய அணியின் பயிற்சி யாளர் ஜஸ்டின் லாங்கர் உல கக்கோப்பை தொடர் குறித்து பேசியுள்ளார்.

அவர் கூறுகையில், 'அவுஸ் திரேலிய அணி உலகக் கோப்பை தொடருக்கு தயாராக இருக்கிறது. இங்கிலாந்து ஆடு களங்களில் எங்களின் பந்து வீச்சு சற்றுக் கவலை அளிப்ப தாகத்தான் உள்ளது. துடுப் பாட்டம் செய்ய சாதகமான ஆடு களங்களில் எதிரணியைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

நியூசிலாந்து அணிக்கு எதி ரான பயிற்சி ஆட்டங்களில் சுமித்தின் ஆட்டம் சிறப்பாக இரு ந்தது.

ஒரு மாஸ்டர் மாதிரி அவர் ஆடினார். அவர் அணிக்குத் திரும்பியது மகிழ்ச்சியான விட யம். அவர் எப்போதும் துடுப் பாட்டம் செய்வதை விரும்பு வார். கடந்த வாரம் பிரிஸ் பேனில் அவர் சிறப்பாக விளை யாடினார்.

அவரது ஷாட்டுகள் நம்ப முடியாதபடியாக இருந்தது. என க்கு சச்சின் டெண்டுல்கர் துடுப் பாட்டம் செய்வதை பார்ப்பது போல் இருந்தது. சுமித் சிறப் பான ஃபோர்மில் இருக்கிறார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில், சுமித் ஆட்டமிழக்காமல் 89 மற்றும் 91 ஓட்டங்கள் விளா சினார் என்பது குறிப்பிடத்தக் கது. (க)

## எடுக்க வேண்டிய...

னுக்கும், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினருக்கும், இடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை திருகோணமலையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அரசியல் ரீதியாக பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்ட பின்னர், நாட்டில் ஏற்பட்ட சில பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாகப் பாதுகாப்பு நிலைமைகள் தற்போது இன்னும் மோசமடைந்திருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் நீண்ட காலமாக பல்வேறு வன்முறைகளுக்கு, உள்ளாகி வந்திருக்கின்றார்கள். தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் தொடர்பாக, ஒரு அரசியல் தீர்வு பெறுவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, பல முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதிலும்கூட அது இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. குறித்த விடயம் தொடர்பில் விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்கான எமது முயற்சிகள் தொடர்கின்றன.

தமிழ் மக்கள் பலமாய் இருப்பதற்கு அவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவ வேண்டியது அத்தியவசியம். பல்வேறு காரணங்கள் நிமித்தம் மக்கள் மத்தியில் எல்லாக் கருமங்களிலும் ஒருமித்த கருத்து இருப்பது, ஒரு கடினமான விடயம்.

ஆனால் தமிழ் மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றுமை தான் அவர்களுடைய பலம். அவர்கள் ஒற்றுமையில்லாமல் இருப்பார்களேயானால் அவர்கள் பலவீனமடைவார்கள்.

சமீபத்தில் கூட நாட்டில் பலவிதமான நெருக்கடிகள் ஏற்பட்டபொழுது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள், விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகள், ஒற்றுமையாக ஒருமித்துச் செயற்பட்ட காரணத்தின் நிமித்தம், நாங்கள் எமது பலத்தை நிரூபிக்கத்தக்கதாக இருந்தோம்.

இந்த வருடத்தில் தேர்தல்கள் நடைபெறும். மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பன நடைபெற வேண்டும்.

வருகின்ற வருடத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறலாம், அல்லது அதற்கு முன்பாகவும் நடைபெறலாம், இந்தவிதமான விடயங்கள் நடைபெறுகின்றபோது தமிழ் மக்கள் ஒருமித்து ஒற்றுமையாக தங்களுடைய செயற்பாட்டின் மூலமாக தாங்களுடைய பலத்தைப் பிரதிபலிக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அது அத்தியாவசியமாகும்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாங்கள் எடுக்க வேண்டிய அத்தனை முயற்சிகளையும் எடுத்திருக்கின்றோம்.

அரசியல் கைதிகளை விடுவிக்கவில்லை என நாங்கள் பொத்தம் பொதுவில் சொல்ல முடியாது. ஐம்பது வீதமானவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மற்றவர்கள் விடுபடுவதைப் பொறுத்தவரையில், அதில் சில தாமதங்கள் இருக்கின்றன. ஆனால் எமது முயற்சி அந்த விடயம் சம்பந்தமாகத் தொடர்கின்றது, என்றார். (ம-3)

# வரட்சி காரணமாக 17 மாவட்டங்களில் 3 இலட்சத்துக்கு அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் 17 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மலையகம் உள்ளிட்ட நாட்டின் 17 மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுவதாக, இடர்முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக கடும் வறட்சி நிலவுகின்றது.

இதன் காரணமாக புத்தளம் மாவட்டத்திலுள்ள 8 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் 9 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 673 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் வறட்சி காரணமாக குளங்களில் நீர் வற்றியுள்ளதுடன், மேய்ச்சல் தரைகளும் கருகிப்போயுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வறட்சி காரணமாக, யாழ். மாவட்டத்தில் 13ஆயிரத்து769 குடும்பங்களைச் சேர்ந்த 46ஆயிரத்து 41 பேரும், மன்னார் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 324 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12ஆயிரத்து 770 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 107 பேரும், அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் 16ஆயிரத்து 382 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 479 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

# அத்தியாவசிய பொருட்களின் வர்த்தகத்தில் கடும் வீழ்ச்சி

## வர்த்தகர்கள் சங்கம் கவலை

(கொழும்பு)

கடந்த மூன்று வார காலப்பகுதியினுள் உருளைக்கிழங்கு, பருப்பு உள்ளிட்ட பல அத்தியாவசிய பொருட்களின் வர்த்தகம் நூற்றுக்கு 50 சதவீதம் அளவில் குறைவடைந்துள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை, இதற்கு காரணம் என அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹேமக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான வர்த்தகம் தற்காலிகமாக முடங்கியுள்ளதாக் பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர் அஸ்லாம் பஹாலி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி, ஆடைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் உருளைக்கிழங்கின் இறக்குமதியும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் ஏற்பட்ட நிலைமை இதற்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்தை தாம் நிராகரிப்பதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியுடன் கூட்டமைப்பினர் சந்திப்பு



(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனுர ஜெயசேகரவுக்குமிடையிலான விசேட சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு இராணுவக் கட்டளைத் தளபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தினைத் தொடர்ந்து மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் மக்கள் செயற்பட வேண்டிய விதங்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் பாடசாலைகள், ஆலயங்களின் பாதுகாப்பு தொடர்பிலான நடைமுறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் பாடசாலைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் உணரும் வகையில் தெளிவுபடுத்துவது குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை தற்போது இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைந்து வீணான சந்தேகங்களைக் கடந்து ஒரு சுமூக நிலையை ஏற்படுத்துகின்ற விதத்திலும், மீண்டும் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாத வகையில் நிலைமை ஏற்பட வேண்டும் என்ற வகையிலாக இக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. (ம-3)

# ரிஷாத் பதவி விலகாவிட்டால் பிரேரணைக்கு ஆதரவளிக்க தயார்

## இராஜாங்க அமைச்சர் பெரேரா

(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதவி விலகாவிட்டால், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தான் தீர்மானித்துள்ளதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுதலை செய்யுமாறு, இராணுவத் தளபதிக்கு அமைச்சர் அழுத்தம் விடுத்துள்ளார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கை மூலம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு தடையை ஏற்படுத்துவதாக சமூகத்தில் நிலைபாடு தோன்றியுள்ளது.

எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர், அமைச்சர் ரிஷாத் பதவி விலகவிட்டால், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# இலங்கை மீனவர்கள் ஐவர் பாகிஸ்தானில் கைது

மாத்தறை - மிரிஸ மீன்பிடிதுறை முகத்தின் ஊடாக மீன்பிடிக்கச் சென்ற ஆழ்கடல் மீன்பிடி படகான ரன்மெனிகா பாகிஸ்தான் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு, படகில் சென்ற ஐந்து மீனவர்களையும் அந்நாட்டு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த மார்ச் மாத 26 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது.

குறித்த படகில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் ஒரு நாள்விட்டு ஒருநாள் மிறிஸை மீன்பிடித் துறைமுகத்திடம் தொடர்பு கொண்டுள்ளனர். அதற்கமைய கடந்த மாதம் 5 ஆம் திகதி தமது படகை பாகிஸ்தான் கடற்படை படகு நெருங்குவதாக குறிப்பிட்டுள்ளனர்.

மறுநாள் தொடர்பு கொண்டபோது பாகிஸ்தான் கடற்படையினர் எம்மை கைது செய்து கராச்சி நகரத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள் என்றும் எம்மை விடுவிக்க வேண்டுமென்றால் நாங்கள் சென்ற படகின் உரிமையாளர் பாகிஸ்தானுக்கு வருகைத்தர வேண்டும் என குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களின் குடும்பத்தினர் அது தொடர்பான தகவல்களை படகின் உரிமையாளரிடம் தெரிவித்த போது , சில ஆவணங்கள் தம்மிடம் இல்லையென குறிப்பிட்டு அவர் செல்ல மறுத்துள்ளார்.

பின் கடந்த 9 ஆம் திகதி குறித்த படகின் மேற்பார்வையாளராக செயற்பட்ட அமில சம்பத் எனப்படுபவர் தனது மனைவிடம் தொடர்பை மேற்கொண்டு இன்று எமது வழக்கு விசாரிக்கப்படுகின்றது. எம்மை காப்பாற்ற இலங்கையிலிருந்து யாராவது வருகை தந்திருக்கின்றார்களா என வினவியுள்ளார். (ம-3)


### சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2019/05/20 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1427 |

எழுத்து 02 — வெற்றி இலக்கம் 06 16 33 36 — 63 41

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 20/05/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 382 |

I 21 — வெற்றி இலக்கங்கள் 03 38 68 69

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2019/05/20 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3920 |

ஆங்கில எழுத்து N — வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 4 3 3 0 4

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.05.20 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2123 |

ஆங்கில எழுத்து T — வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 12 32 60

தேசிய லொத்தர் சபை

## இதுவரையில்...

வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களில் 69 பேர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் 20 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைசெய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் உதவியுடன் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.(ம-3)

## பயங்கரவாதிக...

ளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அம்பாறை கல்முனையில் வைத்து அவர்கள் மூவரும் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## நம்பிக்கையில்லா...

பதியுதீனிடம் இந்த வாக்குறுதியை இரா. சம்பந்தன் வழங்கினார்.

ரிஷாத் பதியுதீனிற்கு எதிராக கூட்டு எதிரணி நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பித்துள்ளது. இதையடுத்து, தனக்கு ஆதரவு திரட்டி ரிஷாத் சிறுபான்மைக்கட்சிகள் அனைத்துடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி வருகிறார். இதன்படி, இரா. சம்பந்தனுடனும் தொலைபேசியில் பேசினார்.

இதன்போது, இரா.சம்பந்தன் பதிலளிக்கும்போது ஒரு சிறுபான்மைக்கட்சியொன்றின் மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை. கட்சிக்குள் பல்வேறு அபிப்பிராயங்கள் இருந்தாலும், நாங்கள் அந்த பிரேரணையை ஆதரிக்கப் போவதில்லை என அழுத்தம் திருத்தமாக வாக்குறுதியளித்துள்ளார். (ம-3)

## இலங்கையின்...

டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் உள்ளிட்ட 10இற்கும் அதிகமான .com மற்றும் .lk ஆகிய முகவரிகளைக் கொண்ட இணையத்தளங்கள் நேற்று முன்தினம் காலை சைபர் தாக்குதலுக்கு உள்ளாகி செயலிழந்தன.

ராஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் ஆகியவற்றின் இணையத்தளங்களும் முடக்கப்பட்டன.

எனினும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, முடக்கப்பட்ட இணையத்தளங்கள் மீண்டும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக, அவசர கணினி பதிலளிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## அடுத்த வாரத்து...

அத்தே ஞானசார தேரர் விடுவிக்கப்படுவார் என தாம் நம்புவதாக அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர், விதாரந்தெனிய நந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் சுக துக்கங்களை விசாரிப்பதற்காக நேற்று காலை வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றிருந்த அவர், பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வலிப்பு நோயால்...

கேவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முள்ளியான் கட்டைக்காட்டைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான க.அமலதாஸ் (வயது-38) என்ற இளம் குடும்பஸ்தரே மரணமானவராவார்.

கடற்றொழிலுக்கு சென்ற மேற்படி இளம் குடும்பஸ்தர் கரைக்கு திரும்பிக் கொண்டிருந்த போது வலிப்பு நோயால் கடலுக்குள் தவறி வீழ்ந்ததாக கூறப்படுகிறது.

கடலுக்குள் இழுத்துச்செல்லப்பட்ட அவரை சக மீனவர்கள் தேடிய போது சடலமாக மீட்கப்பட்டார். இது தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60-64)

## அனைத்து வழிபா...

ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வட மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பல பாகங்களிலும் கடந்த மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களின் ஒரு மாத பூர்த்தியினை நினைவுகூரும் முகமாக இன்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8:45 மணிக்கு வடமாகாணத்தின் அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் மணியோசை ஒலிக்க செய்வதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியினையும் மேற்கொள்ளுமாறு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வடமாகாணத்தின் அனைத்து சமயத் தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த தருணத்தில் வடமாகாணத்தின் அனைத்து மக்களையும் இணைந்து கொள்ளுமாறும் ஆளுநர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## அனைத்து குற்றச்...

ஆதாரபூர்வமாக பகிரங்கப்படுத்துவோம் எனவும் குறிப்பிட்டார்.

பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பிலான விவாதத்தை இரண்டு நாட்களுக்கு எடுத்து கொள்ள வேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக் கொண்டார்.(ம-3)

## ரிஷாத் பதியுதீ...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெற்றால் ரிஷாத் பதியுதீனுக்கு ஆதரவாக செயற்படும் மேலும் 5 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கம் இழக்க நேரிடும் என்றும் இதனால் ஆட்சி கவிழ்ப்பு ஏற்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்தோடு நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக செயற்படுவர்கள் தேசதுரோகிகளாகவே மக்களால் அடையாளப்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் அது ஐக்கிய தேசிய கட்சிக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதாவது பிரேரணை வெற்றிபெற்றால் ரிஷாத் பதியுதீனுக்கு ஆதரவாக செயற்படும் மேலும் 5 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கம் இழக்கநேரிடும். இதனால் ஆட்சி கவிழ்ப்பு ஏற்படும்.

இதேவேளை பிரேரணை தோல்வியடைந்தால் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்களும் மக்களால் தேசதுரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் உறுப்பினர்கள் என்று கருதும் அளவிற்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

எதிர்தரப்பினர் விடயத்தில் மாத்திரமே பாதுகாப்பு துறையினர் முறையாக செயற்படுகின்றார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களான பியல் நிஷாந்த சில்வா மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இதுவரையில் நீதித்துறைக்கு அவப்பெயரினை ஏற்படுத்திய மேல்மாகாண ஆளுநர் அசாத்சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோருக்கு எதிராக இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## இந்த வருட இறு...

அந்தவகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் டிசம்பர் 7 ஆம் திகதிக்குள் நடத்தப்படும் என அவர் உறுதிபட தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின்படி ஜனாதிபதியின் காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதியின் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மேலும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்னதாக தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் சட்டமன்றம், நிறைவேற்று அதிகாரி அல்லது அரசாங்கத்திடம் ஆலோசனை பெறவேண்டிய கட்டாயம் தேர்தல் ஆணையதிற்கு இல்லை. அந்தவகையில் ஜனாதிபதி தேர்தலை சுதந்திரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடத்த தேர்தல்கள் ஆணையம் எதிர்பார்த்துள்ளது.

மேலும் தேர்தல் நடைபெறும் தினம் மற்றும் தேர்தல் பிரசாரத்தின் காலம் ஆகியவற்றை ஒக்டோபர் நடுப்பகுதியில் அறிவிக்கப்படும். ஆனால் ஜனாதிபதி தேர்தலை அரச விடுமுறை தினத்தில் நடத்த முடியாது என்றும் கூறியுள்ளார்.(ம-3)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /-Kg
கனடா- 900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து- 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-4232)
0768222640
TRAVELS



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 08 1937



மறைவு 21 05 2017

அமரர்
திருமதி சின்னையா பொன்னு

ஈராண்டுகள் என்ன ஈராயிரம் ஆண்டுகள் ஆயினும்
அம்மாவின் இடத்தை நிரப்ப அவனியில் யாருமில்லை

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இலையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(8851)





வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623
(8864)



Inner Circle

உடனடி வேலைவாய்ப்பு

Management Trainees
Study & Work in North Provincial



யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சியின் போது அடிப்படை சம்பளம் 24,500/= + (EPF, ETF)
- பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் (EPF,ETF) அடங்கலாக ரூபாய் 45,000/= மேல் பெறலாம்
- நிரந்தர தொழில் வாய்ப்பு
- தகைமை O/L, A/L & 18 தொடக்கம் 26 வரை

(8867)

03/100, Manipay Road, Jaffna.
0767707759, 0779994807



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.